ஒலியா எண்டர்டையின்மன்ட்
தமிழ் திரைபடங்கள் (வாடகைக்கு, விற்பனைக்கு)
பாடல் CDs
வீடியோ CDs
Open
10am - 10pm
ரசனையின் இருப்பிடம், ராசியான இடம்
WELCOME HOUSE
128 Ealing Road, Alperton,
Wembley HA0 4TH
Tel: 020 8922 8583

இலவசம்
The UDHAYAN
# உதயன்
உங்கள் பிரதியினை இலவசமாக எடுத்து செல்லுங்
UN-5 Tuesday, 2nd May, 2000 Pages 12
e-mail : thelondon@udhayan.freeserve.co.uk

EURO RADIO CARS LTD
24 HOUR
MINICAB SERVICE
020 8900 2222
WWW.HARI-VIP.CO.UK/EURO.HTML
HARI OFF LICENCE
TAMIL VIDEO'S AND CD'S
SOLD HERE
1 LONDON ROAD, WEMBLEY
020 8902 5208

உள்ளே....
நியுகாம் மக்கள் பிரதிநிதி திருவாளர் போல் சத்தியநேசனுடன்... 8ம் பக்கம்
நேர்மையற்ற வழக்கறிஞர்கள்... 7ம் பக்கம்
இலவச விளம்பரங்கள்..... FREE ADS 11ம் பக்கம்

Brinden Video Vision
Video, Video CDs, CDs, Audios Sale & Rental
Tamil, Hindi & Singhala
Sales & Rental
புதுவருடத்தை முன்னிட்டு புதிய பழைய வீடியோ, CD, ஓடியோ மிக குறைந்த விலையில் கிடைக்கும்.
76 Hoe Street, Walthamstow, London E17
Tel: 07957 110 093 / 5205403
Opening Hrs: 10.00 - 11.00 ( 7 days a Week)

# தேர்தல் வெற்றிக்கு இனவாத துரும்பு அகதிகளை கைது செய்!!! சர்வாதிகாரிகளை விடுதலை செய்!!!





மே மாதம் 4ம் திகதி இலண்டன் மேயரிற்கும் உள்ளாட்சி மன்றங்களிற்குமான தேர்தல் நடக்க இருப்பதை அடுத்து பிரித்தானிய அரசியல் நிலவரம் மிகவும் சூடேறி உள்ளது. இதில் தனது தலைமையை தன் கட்சிக்கு உள்ளேயே தக்க வைக்க போராடி கொண்டிருக்கும் கொன்சவேடிவ் தலைவர் வில்லியம் ஹெக் குளிர் காய முற்பட்டு உள்ளார். 2001ம் ஆண்டு தேர்தலில் தனது கட்சி ஆட்சிக்கு வருமானால் வெள்ளம் போல் வந்து குவியும் போலி அகதிகளை தடுப்பு முகாம்களில் இடுவேன் என்று ஹெக் தெரிவித்து உள்ளார். இவரிற்கு முன்னரே இவருடைய பாராளுமன்ற உள்துறை அமைச்சர் அன் விடகொம் அகதிகளை தடுத்து வைத்து அவர்கள் பிரித்தானியாவில் நுழைவதை கட்டுப்படுத்த வேண்டும் என்று (தொடர்ச்சி 2ம் பக்கம்)

உங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஜவுளி சமுத்திரம்
6 Kumars Silk House
மங்கள கூறைப்பட்டுப் புடவைகள், காஞ்சிபுரம், தக்ஷநோட்ரி, மைசூர், கஸ்மீர் கில்க் முதல் பட்டு வேட்டி, நூல் வேட்டி, சிறுவர் சிறுமியர் ஆடைகளுடன்,
10000க்கு மேற்பட்ட தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே தமிழர் புடவை மாளிகை
சிறந்த தரம்! நிறைந்த மலிவு!
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்
6 குமார்ஸ் சில்க் ஹவுஸ்
285 High Street North, Eastham, London E12 6SL
Tel: 020 8471 5742 Fax: 020 8471 5742

MOON VIDEO ENTERTAINMENT
All SALES & RENTALS
TAMIL
HINDI
ENGLISH VIDEOS
DVDs
VCDs
AUDIOS
CDs
Madura Food & Wine கடையின் கீழ் தளத்தில் இயங்குகிறது.
Offer! 3 படம் எடுத்தால் 4வது படம் வாடகை கிடையாது!
Opening Hrs.
MON-FRI 3pm-11pm
SAT-SUN 12pm-11pm
9 London Road, Tooting, London SW17 9JR
Tel: 020 8255 2443

## மெலனியம் டோமில் இந்திய உலக அழகி



மும்பாயை தளமாக கொண்ட ஹொலிவூட் திரை உலகின் விருதுகளை வழங்க உலக அழகி Yukta Mookhey இலண்டன் வருகிறார். ஹொலிவூட் திரை பரிசு வைபவம் 24 யூனில் மெலனியம் டோமில் 3,300 விருந்தினர்களுடன் நடக்க உள்ளது. இவ்விழாவில் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குனர், சிறந்த நடிகர் .......... முதல் சிறந்த பின்னணி பாடகர் வரை 16 விருதுகள் வழங்கப்பட உள்ளன. இந் நிகழ்ச்சியின் மூலம் மெலனியம் டோமிற்கு மிகுந்த வரவேற்பு

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

அடுத்த இதழ் வெளிவரும் திகதி
UN-6 Tuesday, 6th June, 2000

Palm Beach
Fully Licensed
Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm
and
6.00 pm to midnight
Specialised in catering for wedding and parties
17 Ealing Road Wembley Middx, HA0 4AA
Tel: 020 8900-8664 / 0956-439 765
07939 587 338 / 020 8900 1990



## VMPV VIDEO & ELECTRONIC LTD,

Tel: 020 8902 5055
Fax: 020 8795 0901

150A 2ND FLOOR, EALING ROAD, WEMBLEY, MIDDX. HAO 4PY U.K.

- லண்டன் வாழ் தமிழ், முஸ்லீம் மக்களின் நலம் கருதி, மலிவு விலையில்!!!
- சகல விதமான DVD, VCD PLAYERS !!!
- மற்றும் மிகப்பழைய, இடைக்கால, புதிய படங்கள் !!!
- DVDs, VIDEO CDs, VIDEO CASSETTES !!!

போன்றவற்றை மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஓர் நிறுவனம் **VMPV VIDEO & ELECTRONICS LTD.**

மேலும் எமது நிறுவனத்தில் சகல விதமான புதிய பழைய (1938) **Video** படங்கள், நாடகங்கள், **DVD, VCD** படங்கள் யாவும் வாடகைக்கு விடப்படும்.
(நாடகங்கள் வாடகை **50p** மட்டுமே)

மேலும் கிருமண மற்றும் சகல வைபோக விழாக்கள் Video Cassetteல் பிரதி செய்தல், பிரதி மாற்றுதல் (NTSC & PAL) போன்றவை இங்கு மிகமலிவில் செய்து தரப்படும்.
இவை யாவற்றுக்கும் நாடவேண்டிய ஓர் நிறுவனம்

**VMPV VIDEO & ELECTRONIC LT .**
Tel: 020 8902 5055
Fax: 020 8795 0901


# இரட்டை கொள்ளை

## தமிழ் வர்த்தகரிற்கு £20,000 நஷ்டம்

13ம் திகதி பெப்ரவரியில் தமிழ் வர்த்தகர் ஒருவருடைய வீட்டிலும் அவரது News Agent இலும் இரட்டை களவு இடம் பெற்று உள்ளது. போலிங்ரன் ரோட்டில் உள்ள இவரது வீட்டில் நகைகள், £1,700 பணம் உட்பட களவாடப்பட்டவற்றின் பெறுமதி £17,000 என மதிப்பிடப்பட்டு உள்ளது. இவ் வர்த்தகருடைய நோர்பிற்றன் றெயில் நிலையத்தின் முன் உள்ள 'Blue Moon' News Agentல் இருந்து சிகரெட், பணம் என £3,000 பெறுமதியான களவு இடம் பெற்று உள்ளது. அத்துடன் அங்கு இருந்த Till யையும் தூக்கி சென்று உள்ளனர்.

**சம்பவம்**

5 ஆண்டுகளாக வசித்து வரும் வீட்டில் முதற் தடவையாக இச்சம்பவம் இடம் பெற்று உள்ளது. ஞாயிற்று கிழமை கடையால் மாலை 6 மணிக்கு வந்து, அருகில் உள்ள குடும்ப நண்பர் வீட்டிற்கு மாலை 8 மணிக்கு சென்று, இரவு 12 மணிக்கு வீடு திரும்புவதற்கு இடையில் களவு இடம் பெற்று உள்ளது. வீட்டு கதவை திறப்பு போட்டு திறந்து சென்றே கள்வர்கள் தம் கைங்கரியத்தை காட்டி உள்ளனர். மறுநாள் வங்கியில் இட எண்ணி சுற்றி படுக்கை அறையில் வைத்த பணத்தையும் அங்கிருந்த நகைகளையும் கள்வர்கள் சூறையாடி சென்றனர். மறுநாள் காலை கடையை திறக்க சென்றவரிற்கு இன்னோர் அதிர்ச்சி காத்திருந்தது. கடையில் இடம் பெற்ற களவு பற்றி கூறிய அவ் வர்த்தகர் தனது நிலையை "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல், என் நிலை ஆகிவிட்டது," என மிகுந்த வேதனையுடன் குறிப்பிட்டார். தான் இக் கடையை எடுத்து நான்கு மாதங்களே ஆகின்றது என்றும் இக் குறுகிய காலத்தில் தனக்கு இவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டதால் அன்றாட வியாபாரத்தை நிர்வகிக்கவே பெரிதும் கடினமாக இருப்பதாக அவர் கவலையுடன் தெரிவித்தார்.

இச்சம்பவத்திற்கு பின்னும் மேலும் இரு தடவைகள் கொள்ளை முயற்சி இடம் பெற்று இருக்கிறது. ஆனால் இத்தடவை கொள்ளை இட முயற்சித்தவர்கள் முன்னையவர்கள் இல்லை. கடையில் களவுக்கு வழி உண்டு என்பதை அறிந்த வேறு சிலரே இம் முயற்சியை செய்திருக்க வேண்டும் என்று கூறுகிறார் அவ் வர்த்தகர்.

**கைது**

இக்களவுகள் தமிழ் சமூகத்தினுள் இயங்கும் ஓர் கொள்ளை குழுவால் திட்டமிடப்பட்டு இருக்கலாம் என்று பரவலாக நம்பப்படுகிறது. ஆனால் காவல்துறை எதனையும் உறுதி செய்யவில்லை. ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ள காவல்துறை அந்நபர் பற்றிய தகவல்களை வெளியிட மறுத்து விட்டது. சந்தேக நபர் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அனுமானத்தின் கீழ் அந்நபர் பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை என தெரியவருகிறது.

**ஊக்குவிப்பு**

"எங்கடை ஆக்களில் சிலபேர் இந்த கள்ள நகைகளையும் சிகரேட்டுக்களையும் வாங்கிறதாலையும் இந்த களவுகளை ஊக்கப்படுத்தினம். விக்க கொண்டுவா[illegible] கள்வர்களை பற்றி பொலிஸிற்கு அறிவித்தால் ஓரளவுக்காவுதல் இக்களவுகளை குறைக்கலாம்," என தெரிவித்தார் அவ் வர்த்தகர். இவரது கருத்து காவல் துறையாலும் ஏற்று கொள்ளப்பட்ட கருத்து என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒளி வானில் தீபம்

24 மணி நேர தமிழ் ஒளிபரப்பான தீபம் யூன் மாதம் முதல் ஒளிபரப்பப்பட உள்ளது. Teleeuro Limited நிறுவனமே இவ் ஒளிபரப்பை மேற்கொள்ள உள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்து அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் தருவிக்கப்பட்டு ஆரம்ப கட்ட வேலைகள் தமது இலண்டன் தீபம் காட்சி அரங்கில் பூரணமாக்கப்பட்டு உள்ளதாக அந் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் செல்வகுமாரன் தெரிவிக்கிறார். அவர் மேலும் கூறுகையில் ஆரம்பத்தில் ஐரோப்பாவிலும் அடுத்து மத்திய கிழக்கிலும் இறுதியாக சர்வதேச அளவிலும் ஒளிபரப்புகள் இடம்பெறும் என்று தெரிவித்தார்.

தீபம் ஓர் நடுநிலையான தொலை காட்சி ஒளிபரப்பாக இயங்கும் என்றும் ஓர் நாளைக்கு 4 தடவைகள் செய்திகளும் இரு படங்களும் வார இறுதி நாட்களில் புதிய படங்களும் ஒளிபரப்பப்பட உள்ளதாகவும் செல்வகுமாரன் தெரிவித்தார். நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், நேரடி ஒளிபரப்புகள், சிறுவர் நிகழ்ச்சிகள் என தரமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட உள்ளது. இவற்றுடன் இலங்கை, இந்தியாவில் ஒளிபரப்பப்படும் தரமான நிகழ்ச்சிகளை இதில் மறு ஒளிபரப்பு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.


## CHURCH LANE CASH & CARRY

Tel: 020 8200 4552

155 CHURCH LANE
KINGSBURY
LONDON NW9 8JU

OPENING HRS. 8 am - 9pm
Monday - Saturday
Sunday 9am - 8pm

Church Lane'ல் (Kingsbury) தமிழர் நிறுவனம்

உங்கள் அன்றாட தேவையான

மரக்கறி, மீண்வகைகள், பலசரக்கு சாமான்கள்

மற்றும் பலவகை பொருட்களுடன் CD, AUDIO,

VIDEO Tapes விற்பனைக்கும், வாடகைக்கும்

பெற்றிட வாருங்கள் வந்து பாருங்கள்

Church Lane CASH & CARRY


# சீதன வழக்கில் பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பு



திருமண உறவு முறிந்த பின், மணமகள் வழங்கிய சீதனத்தை திருப்பி கொடுக்கும்படி மணமகனிற்கு பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பு அளித்து உள்ளது. வழமையாக இப்படியான பிரச்சனைகள் அச்சமூகத்திற்கு உள்ளேயே தீர்க்கப்படுவது வழக்கம். ஆனால் முதற் தடவையாக ஓர் வரலாற்று திருப்பமாக பிரித்தானிய சட்டம் ஆசிய திருமண (குறிப்பாக இந்து) வழமைக்குள் சென்று நீதி வழங்கி உள்ளது. இது பல சீர்திருத்த வாதிகளால் மிகவும் வரவேற்கப்பட்டு உள்ளது

1996 ஒகஸ்ற்றில் 900 விருந்தினர் மத்தியில் மார்க்ஸ் அன்ட் ஸ்பென்சர் முகாமையாளர் றாகேஷ் வர்மாவிற்கும் 23 வயதான வீட்டு வங்கிக் கடன் ஆலோசகர் பொபிற்றாவிற்கும் நடந்த திருமணம் அவர்களிற்கு இடையேயான பழக்கவழக்கங்கள் மற்றும் கசப்புணர்வால் 70 நாட்களிலேயே முறிவடைந்தது. அப்போது இருந்தே மணப்பெண் பொபிற்றா தம் வீட்டார் கொடுத்த £26,000 பெறுமதியான (இவற்றுள் நகைகள், விலை உயர்ந்த புடவைகள் ஆகியனவும் அடக்கம்) சீதனத்தை திருப்பித்தரும்படி பிறட்போர்ட் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருந்தார்.

இவ்வழக்கின் தீர்ப்பு மணப் பெண்ணிற்கு சார்பாக தீர்க்கப்பட்டு; மணமகன் வீட்டாரை மணப்பெண்ணின் உடமைகளை மீள கையளிக்கும் படி கோரி உள்ளது. அவர்கள் அவற்றை கையளிக்க மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றம் கொடுக்க மறுக்கப்பட்ட பொருட்களிற்கு பண மதிப்பிட்டு தீர்க்கும் என்றும் தெரியவருகிறது. பிரித்தானிய நீதிமன்றத்தின் இத் தீர்ப்பு பெண்களிற்கு ஓர் சட்ட ரீதியான பலத்தை அளித்திருப்பதாக சீர்திருத்த வாதிகள் தெரிவிப்பதுடன் இது பல பெண்களிற்கு வரும் காலங்களில் கை கொடுக்கும் என்றும் தெரிவித்து உள்ளனர். சீதனம் வழங்குவதாயின் காசோலையாக வழங்கினால், தேவை ஏற்படின் பிற்காலத்தில் ஆதாரமாக பயன்படுத்தலாம் என ஓர் சட்ட அறிஞர் தெரிவிக்கிறார்.

# நகை கடையில் £25,000 கொள்ளை

## கள்ள நகை வாங்கியவர்களிற்கு பொலிஸ் வலைவிரிப்பு

(நியூ மோல்டன்) பேர்லிங்ரன் வீதியில் உள்ள ரத்தினம் ஜுவலர்ஸ்ஸில் புகுந்த இளைஞர் கும்பல் கடையில் இருந்த பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டு சென்று உள்ளனர். களவாடப்பட்ட நகைகளின் மொத்த பெறுமதி £25,000 என தெரிவிக்கிறார் கணக்காளரும் உரிமையாளருமான திரு சண்முகரத்தினம். இக்கொள்ளையை விசாரித்து வரும் ஸ்கொட்லன்ட் யாட், சம்பவம் தொடர்பாக சில முன்னேற்றங்களை கண்டுள்ளனர்.

### சம்பவம்

ஏப்பரல் மூன்றாம் திகதி ஆறு மணி அளவில், சண்முகரத்தினத்தின் மனைவி மட்டும் கடையில் நின்று இருக்கிறார். சண்முகரத்தினம் அருகில் உள்ள தனது அலுவலகத்தில் தன்னுடைய வேலைகளில் ஈடுபட்டு இருந்தார். ஓர் கறுப்பின கலப்புடைய இளைஞன் கடைக்கு வந்து கதவருகில் வழமைக்கு மாறாக நின்று இருக்கிறான். சற்று நேரத்திற்குள் மேலும் இரு இளைஞர்கள் கதவை வேகமாக தள்ளிய படி முகமூடியுடன் கடைக்குள் நுழைந்தனர் முகமூடிக்காரர்கள் கடைக்குள் வர, முதலில் வந்தவன் கடையில் நின்ற திருமதி சண்முகரத்தினத்தின் மீது பாய்ந்திருக்கிறான். இவற்றை பார்த்து அதிர்ந்த திருமதி சண்முகரத்தினம் சத்தம் இட்டு கதற, பாய்ந்தவன் சத்தம் இட்டால் சுட்டுவிடுவேன் என்று பிஸ்டலால் மிரட்டி அவரின் வாயை தன் கையால் மூடி வைத்திருக்க, மற்றைய இருவரும் ஏற்கனவே தெரிவு செய்து வைத்தது போல் பெறுமதியான நகைகளை மட்டும் தாம் கொண்டு வந்த பைகளில் போட்டு கொண்டு ஓடிவிட்டனர். சில நிமிடங்களிற்குள் இக்கொள்ளை சம்பவம் முடிந்துவிட்டது. ஆனால் எமது நிருபர் ஓர் வாரத்தின் பின் செய்தியை அறிய சென்ற போதும் திருமதி சண்முகரத்தினம் அவர்கள் அந்த அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.

### ஸ்கொட்லண்ட் யாட்

சம்பவத்தை தொடர்ந்து அருகில் இருந்த தமிழரான உதவி தபால் அலுவலக உரிமையாளரும் சம்பவத்தை கண்டவர்களும் பொலிஸிற்கு அறிவிக்க, அவர்களும் சிறிது நேரத்திற்குள் தலத்திற்கு விரைந்து வந்து உடனடியாக அம் மூவரையும் தேடி வலைவிரித்தனர். பொலிஸாரின் கடுமையான தேடுதல் வேட்டையில் அம் மூவரும் சிக்கினர். அப்போது அங்கு வந்த பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் வழமையாக அப் பொலிஸ் பிரிவில் நாளிற்கு ஓர் இரு கொள்ளை சம்பவங்களே இடம் பெறுவதாகவும் ஆனால் அன்று 9 கொள்ளைகள் இப்பொலிஸ் பிரிவில் இடம் பெற்றதாகவும் தெரிவித்தார்.

### சாட்சியங்கள்

முதலில் கடையில் நுழைந்தவன் முகமூடி அணியா்ததால் அவனுடைய முகம் ஒளிப்பதிவு நாடாவில் மிகவும் தெளிவாக பதியப்பட்டு உள்ளது. இவர்கள் கொள்ளை இட்டுவிட்டு ஓடும் போது முகமூடி அணிந்தவர்கள் அங்கு நடந்து வந்து கொண்டிருந்த பெண்ணுடன் மோதி இருக்கிறார்கள். அப்போது இப்பெண் கள்வர்களுடைய கண்களை நன்றாக தன்னில் பதிவு செய்துவிட்டார். கள்வர்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் சாட்சியாக தான் வர தயார் என்றும் கூறி இருக்கிறார் அந்த துணிச்சலான பெண். இவற்றை விட இக்கொள்ளையர்கள் தமது காரை சற்று தள்ளி நிறுத்திவிட்டு; அங்கிருந்து முகமூடி அணிந்து கொண்டுதான் களவிற்கு புறப்பட்டு இருக்கிறார்கள். இக்கள்வர்கள் குளிர்சாதன பெட்டிகள் விற்கும் கடைக்கு முன் காரை நிறுத்தியதையும் முகமூடி அணிந்ததையும் அக்கடைக்கார பெண் பார்த்து இருக்கிறார். இவரும் சாட்சியாக வர தயாராக இருப்பதாக கூறி உள்ளார்.

### பாதிக்கப்பட்டவர்கள்

உதயன்

பாதிக்கப்பட்ட சண்முகரத்தினம் தம்பதிகள் தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய தபாலக உரிமையாளரிற்கும் சாட்சி வழங்க முன் வந்த இரு பெண்களிற்கும் காவல்துறைக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்து உள்ளனர். அதேசமயம் இக்கொள்ளை காப்புறுதி பணத்தை பெற திட்டமிட்டு செய்யப்பட்டதா? இல்லையா? என இரு தமிழ் இளைஞர்கள் எமக்கு கேட்கும் படி பேசியது மிகவும் கவலையாக இருந்தது. இவர்கள் உதவி செய்ய இயலாவிட்டாலும் உபத்திரவம் தராமல் இருக்கலாம் என்று கூறி மனவருத்தப்பட்டார்கள்.

### களவாடப்பட்ட நகைகள் விற்பனை

செய்தி அறிய எமது நிருபர் சென்றிருந்த போது விசாரணைகளை தற்போது மேற்கொண்டு வரும் ஸ்கொட்லண்ட் யாட்டின் குற்ற பிரிவு Flying Squad, களவாடியவர்களை பொலிஸ் பிடிக்கும் போது, அவர்கள் கொள்ளை இட்ட நகைகளை விற்று விட்டார்கள் என தெரிவித்தனர். மேற்படி களவு நடப்பதற்கு முன் தினம் இக்கொள்ளையர்கள் ஹட்டன் கார்டினில் £300 நகை வாங்கி இருக்கிறார்கள் என்றும் களவாடிய நகைகளை விற்று விட்டு தாம் வாங்கிய நகைகளையே விற்றதாக காட்டவே இந்த நாடகம் என்றும் தெரியவருகிறது. மேலும் விசாரணைகளில் இருந்து கள்வர்கள் பயன்படுத்திய வண்டியும் களவாடப்பட்டது என்றும் இக்கும்பல் வேறும் சில கொள்ளை சம்பவங்களிலும் ஈடுபட்டு இருப்பதாகவும் தெரியவந்து உள்ளதாக விசாரணைகளை நடாத்தி வரும் Flying Squad பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

### நீதியும் சாட்சியும்

கள்வர்களிற்கு தண்டனை பெற்று கொடுக்க Flying Squad பிரிவு என்ன செய்ய உள்ளனர் என்பது பற்றி அறிந்தபோது, முகமூடி அணியாதவரை சட்டத்தின் முன் நிறுத்துவதில் எந்த சிக்கலும் இல்லை என்றும் முகமூடி அணிந்த மற்றய இருவருக்கும் எதிரான சாட்சியங்கள் போதாது என்றும் தெரியவருகிறது. முகமூடி அணிந்தவர்கள் பற்றிய மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறுகிறது. அத்துடன் இவர்கள் விற்ற நகைகளை வாங்கியவர்களை தேடியும் பொலிஸார் வலைவிரித்து உள்ளனர். இவர்கள் பிடிபட்டால் முகமூடி அணிந்த அந்த இருவரையும் சட்டத்தின் முன் கொண்டு வரலாம் என ஸ்கொட்லண்ட் யாட் நம்பிக்கை வெளியிட்டு உள்ளது.

# இலவச விளம்பரங்கள்

வாசகர்களின் நன்மை கருதி இலாப நோக்கற்ற சிறு விளம்பரங்களை இலவசமாக பிரசுரிக்க உதயன் திட்டமிட்டு உள்ளது. இதன் மூலம் வாசகர்களிற்கு சில அனுகூலங்கள் ஏற்படும் என்பதால் அவர்களின் நன்மை கருதி இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலதிக விபரங்கள் பக்கம் 11.

**தீபம் தொலைக்காட்சி முழு நிகழ்ச்சி நிரல்**

அடுத்த இதழ் முதல் தீபம் தொலைக்காட்சி ஒளிபரப்பின் முழு நிகழ்ச்சி நிரல் உதயனில் தொடர்ந்து வெளிவரும்.

## £6க்கு வாசலிற்கே உதயன் வரும்!

தபால் மூலம் உதயன்............

'உதயன்' பத்திரிகை தமக்கு கிடைப்பதில்லை என்று எமக்கு சிலர் எழுத்து மூலமாகவும் பலர் தொலைபேசி மூலமாகவும் தெரிவித்து உள்ளனர். இதனை தீர்க்கும் பொருட்டு நாம் தபால் மூலம் பத்திரிகையை விநியோகிக்க திட்டமிட்டு உள்ளோம். உதயனை தபால் மூலம் பெற தங்கள் பெயர் முகவரியுடன் ஓர் ஆண்டிற்கான தபாற் செலவான £6 அனுப்பி வைத்தால் அவர்களின் வாசலிற்கே உதயன் வந்து சேரும். இதில் எந்த இலாப நோக்கமும் இல்லை என்பதை இவ் விடத்தில் உறுதியாக தெரிவித்து கொள்கிறோம்.


பணம் அல்லது காசோலையை GNM(PVT) LTD என்ற பெயரிற்கு எழுதி கீழ்காணும் முகவரிக்கு 29-05-00 முன் கிடைக்க கூடியதாக அனுப்பவும்.

'உதயன்" "GEMINI HOUSE" 25/27 High Street Edgware, Middlesex HA8 7EE

# தற்காப்பு பயிற்சி அவசியம்

"மற்றயவர்களை காட்டிலும் எமக்கு தற்காப்பு பயிற்சி அவசியம்" என நியூகாம் மேயர் 16 ஏப்ரலில் தற்காப்பு கழகத்தை ஈஸ்ற் ஹாமில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சிறுபான்மை இனத்தை சேர்ந்த மேயரான அவருடைய கருத்து சிறுபான்மை இனங்கள் எவ்வளவு தூரம் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டு இருந்தார்கள்; தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை கோடிட்டு காட்டியது.







இத் தற்காப்பு பயிற்சி கழகம் திருவாளர் ரவீந்திரனால் அவரது இல்லத்தில் சில இளைஞர்களின் துணையுடன் ஆரம்பிக்கப்பட்டது. அவரது நேர்த்தியான பயிற்சியின் கீழ் ஜனார்த்தன் 1999ம் ஆண்டும் ரஜீவன், ராஜசோழன், ராமதாஸ் ஆகியோர் 2000ம் ஆண்டிற்கான உலக கிண்ணத்தையும் வென்றனர். 1999ல் இவர்களுடைய கழகம் சிறந்த கழகமாக தெரிவு செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சிறுவர், பெண்கள், இளைஞர்கள் என சில பத்து உறுப்பினர்களை கொண்ட இக் கழகம் இன்னும் சில ஆண்டுகளில் பெரு வளர்ச்சி அடைய வேண்டும் என்றும் இவர்களை இட்டு தாம் பெருமைப்படுவதாகவும் விழாவிற்கு பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட நியூஹாம் மேயர், நகராட்சியாளர் திருவாளர் போல் சத்தியநேசன், ஐக்கிய தமிழர் அமைப்பின் பிரதிநிதி திரு சாந்தன் ஆகியோர் குறிப்பிட்டனர்.

திருவாளர் போல் தனது உரையின் போது இவ் இளைஞர்கள் ஏனைய சமூகங்களிற்கு முன் உதாரணமாக திகழ்வதாகவும் அவர்களை ஊக்கப்படுத்துவது எமது கடமை என்றும் குறிப்பிட்டார். திரு சாந்தன் ரவீந்திரனுடைய கடின உழைப்பை பாராட்டி தமிழ், சமுகத்தின் நிலை பற்றியும் குறிப்பிட்டார். விழாவின் போது சில பயிற்சிகள் செய்து காண்பிக்கப்பட்டது. சிற்றுண்டி வழங்கலுடன் விழா நிறைவேறியது.

வழமையாக தமிழ் மக்களின் விழாவின் போது (வர்த்தக விழா தவிர்ந்த) தாயகத்தில் உயிர்நீத்த அனைவரிற்கும் மௌன அஞ்சலி செலுத்துவது ஓர் நிகழ்வு முறையாக இருந்து வந்தது. ஆனால் இவ்விழாவில் அப்படி செய்யாதது சிலரிடையே சிறிய மன தாங்கலை ஏற்படுத்தி இருந்தது. வேறு ஓர் இனத்தவரான மேயரிற்கு அந்த அஞ்சலி, எமது உணர்வுகளை அறிந்து கொள்ள அவரிற்கு ஓர் வாய்ப்பாக இருந்து இருக்கும் என அவர்கள் கருதினர்.

PLASWARE

புத்தாண்டு வாழ்த்துக்கள்

Manufacturers and exporters of Disposable Catering and Party Prod-

FOR ALL CATERING, WEDDING AND PARTY REQUIREMENTS

WE STOCK:

- PLAIN AND SECTION PLATES IN PLASTIC AND FOAM
- PLASTIC CLEAR AND FOAM GLASSES AND CUPS
- PLASTIC CUTLERY
- 32 DIFFERENT COLOURED PAPER AND DISPOSABLE LINEN NAPKINS
- MATCHING TABLE COVERS AND BANQUETING TABLE COVER ROLLS
- FOIL PLATTERS AND CONTAINERS, CUPS
- PAPER PLATES AND COATED PAPER PLATES
- PLASTIC AND FOAM BOWLS
- SWEETS AND FOOD PACKING CONTAINERS
- BALLOONS, RIBBONS, CREPE PAPER ROLLS AND SHEETS
- DECORATIONS, FOIL BALLOONS, PARTY POPPERS, PARTY HATS
- BALLOON GAS TANK HIRED OUT AND MANY MORE PARTY DECORATIONS AND PRODUCTS

பார்டி சம்பந்தமான தேவைகளுக்குரிய எல்லாவகையான பிளாஸ்ட்டிக் மற்றும் போம் தட்டுகள், கப்புகள், பலூன்கள், பவல்கள், வாடகைக்கு பலூன் காஸ் டாங்க் மற்றும் இதர பொருட்களை நாங்கள் தயார் செய்து விற்கின்றோம். மேலும் விவரங்களுக்கு கீழ்காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

WE ARE HERE
Honeypot Lane
Alpine Double Glazing
Party products by PLASWARE
New Safeway Stores

WE CAN ALSO PRINT ON BALLOONS AND NAPKINS WITH PERSONAL MESSAGES AND STANDARD STOCK LOGOS

Come and see our Showroom:
PLASWARE "SAI HOUSE" UNIT3 BOWMAN TRADING ESTATE, WESTMORLAND ROAD (OFF HONEYPOT LANE), KINGSBURY, LONDON NW9 9RL
OPEN MON-SAT: 9.30AM - 7.00PM

020 8206 1292
FAX: 020 204 6883
E-Mail: plasware@plasware-international.co.uk

# சீதனம் - Rip Off Women

(இலண்டன்) மாப்பிளைகளின் விலை நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை காட்டிலும் மிக அதிகமாக உயர்ந்து உள்ளது. ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் பிரித்தானியாவில் பொருட்களின் விலை அதிகம் என்ற பல்வேறு பிரிவினரின் குரல்களை தொடர்ந்து பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. Rip Off Britain என்ற பிரச்சாரம், பல்வேறு நிறுவனங்களையும் பொருட்களின் விலையை ஏனைய மேற்கு நாடுகளிற்கு ஒப்பானதாக கொண்டுவர நிர்ப்பந்தித்து உள்ளது. ஆனால் இவற்றிற்கு மாறாக மாப்பிளைகளின் விலை றொக்கற் வேகத்தில் அதிகரித்து உள்ளது.



Petrol Station, Kentukey மற்றும் McDonalds போன்ற உணவு விடுதிகளில் வேலை செய்பவர்களிற்கு £5,000 ல் இருந்து சீதனம் ஆரம்பிக்கிறது. எந்த வேலையும் செய்யாது டோலில் காலத்தை ஓட்டுபவர்களிற்கும் ஆண் என்ற ஒரே காரணத்திற்காக அதே அளவு சீதனம் வழங்கப்படுகிறது. இவற்றிற்கு மேல் வேலை போட்டியில் ஒவ்வோர் படி ஏறுபவரிற்கும், ஏதாவது ஓர் பல்கழைகழகத்தில் தக்க பட்டங்களை பெறுபவர்களிற்கும்; சீதனம் அதற்கு ஏற்றாற் போல் ஏறுகிறது. ஓர் கணக்காளர் £15,000 வரை எதிர்பார்க்கிறார். ஓர் பொறியியலாளர் £25,000 வரை எதிர்பார்க்கிறார்.

இலங்கை தமிழ் திருமணங்களில் கடன் சொல்வது பொதுவாக குறைவு. திருமணத்திற்கு முன்பே கொடுக்கல் வாங்கல்கள் முடிக்கப்படுவதால் பொதுவாக பிச்சு பிடுங்கல்கள் ஏற்படுவதில்லை. மேலும் ஓர் குடும்பத்தில் உள்ள ஆண், பெண் பிள்ளைகளின் விகிதத்தை பொறுத்து அவர்களுடைய மாப்பிளை கொள்வனவு சக்தி தீர்மானிக்கப்படும். குடும்பத்தில் ஆண் : பெண் விகிதாசாரத்தில் ஆண்களின் எண்ணிக்கை குறைந்து அல்லது ஒன்றாக இருந்து பெண்களின் எண்ணிக்கை இரண்டு அல்லது அதிகமாக இருக்கும் நடுத்தர குடும்பங்களில் சீதனம் பாரிய பாதிப்புகளை அக் குடும்பத்திற்கு ஏற்படுகிறது. சில ஆண்டுகளிற்கு முன் வவுனியாவில் சீதனம் தொடர்பாக அவமானம் அடைந்த பெண் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தற்கொலை செய்து கொண்டு உள்ளனர். (ஆதாரம் - சரிநிகர்)

பல நொண்டி காரணங்கள் மூலம் சீதனம் ஆதரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மணமகள் கூட சீதனம் கேட்கின்ற சம்பவங்கள் பல உள்ளன. இப்போது புதிய வடிவமைப்புடன் புதிதாக வரும் காரை நாம் வாங்குவது போன்று மணமகள் தனக்கு ஏற்ற மாப்பிளையை வாங்க முயற்சிக்கிறார். இவர் விரும்பியதை, மணமகளிற்கு ஏற்றதை வாங்கி கொடுக்கும் பொறுப்பு மணமகள் வீட்டாரிற்கு இருப்பதால் அவர்கள் தமது இயல்பிற்கு மீறியும் அந்த விலையை கொடுக்க முயற்சிக்கிறார்கள்.

எமது சமூகத்தில் காணப்படும் சீதனமுறையில் வாங்குபவரோ கொடுப்பவரோ சந்தோசமாக இருப்பதில்லை. வாங்கும் சீதனம் பெரும்பாலும் நகைகளாக பெட்டிக்குள் முடங்கிகிடக்கும் இல்லையேல் பணம் கரைவது தெரியாமல் ஒருசில ஆண்டுகளிற்குள் கரைந்து விடும் அல்லது வாங்கியவர் தான் சம்பந்தப்பட்டவரிற்கு அதை சீதனமாக வழங்குவார். சீதனம் வாங்கி வாழ்க்கையில் முன்னேறியவர்கள் யாரும் இல்லை. இப்படி வீணடிக்கப்படும் பணத்தை சம்பாதிக்க அதனை கொடுத்த இளைஞன் தன் இளமை, கல்வி, பொருளாதாரம் எல்லாவற்றையும் இழக்கிறான். வழங்கிய சீதனத்தை அவன் நல்லமுறையில் முதலீடு செய்து இருந்தால், தனது கல்வியில் அதிக அக்கறை செலுத்தி இருந்தால் அவனை சார்ந்த சமூகமும் முன்னேறி இருக்கும். இளமை மீண்டும் திரும்பி வராது. அந்த இளமையில் அவன் கவனம் தன் சகோதரிகளிற்கு சீதனம் கொடுப்பதில் கழிந்தால் சில ஆண்டுகளின் பின் அவனால் தன் கல்வியை தொடர முடியாது.

யாருக்கும் உதவாத, மிகுந்த பெண் அடிமைத்தனத்தை கொண்டுள்ள, குத்தகைக்கு விபச்சாரம் செய்யும் இந்த சீதன முறை தமிழ் சமூதாய அமைப்பில் இருந்து களையப்பட வேண்டும். சீதனம் பற்றி குறிப்பிட்ட ஈஸ்ற்றாமை சேர்ந்த முன்னாள் தமிழீழ விடுதலை போராளி புஸ்பா, "சீதனம் வாங்கி திருமணம் செய்து கொள்பவர்களின் திருமணங்களிற்கு நானும் எனது சில நண்பர்களும் செல்வதில்லை. இதனை மற்றையவர்களும் கடைப்பிடித்து, சீதனம் வாங்குவது கேவலமானது என உணர்த்தினால் நிச்சயம் மாற்றம் ஏற்படும். ஆனால் சில சமயங்களில் உறவினர்கள் மிக நெருங்கியவர்கள் சீதனம் வாங்கி திருமணம் செய்யும் போது தவிர்க்க முடியாமல் எனது விருப்பத்திற்கும் கொள்கைக்கும் மாறாக கலந்து கொள்ள வேண்டியதாக உள்ளது" என்றார். துரதிஸ்ட்டவசமாக முன்னாள் போராளிகள், பெண் விடுதலை பற்றி பேசியவர்கள் கூட சீதனம் வாங்கி திருமணம் செய்து கொண்டு உள்ளார்கள்.

(சீதனம் பற்றிய உங்கள் கருத்துக்களையும் நாம் எதிர்பார்க்கிறோம். உங்கள் கருத்துக்களை உங்களுடன் மட்டும் வைத்திருக்காமல் எமக்கு எழுதி அனுப்புங்கள், பரந்த வாசகர் வட்டத்தை அது சென்றடையும். சீதனம் என்ற இச் சமூக பிரச்சனையால் நீங்களோ அல்லது உங்களிற்கு தெரிந்தவரோ பாதிக்கப்பட்டு இருந்தால் எமக்கு அதனை எழுதி அனுப்புங்கள். அதனை சமூக விழிப்புணர்ச்சிக்காக பயன்படுத்த முடியும். அப்படி பிரசுரிக்கும் போது நிச்சயம் சம்பந்தப்பட்டவர்களின் பெயர் விபரங்களில் இரகசியம் பேணப்படும். )

**Raman Jewellers**

OPENING OFFER

**We offer 20% Discount**

வந்து பாருங்கள்

**on all Jewellery**

140 ILFORD LANE, ILFORD ESSEX.

**020 8514 0410**




**8908 5000**

The best deal in the town

nearly 1/2 price

Established over 15 Years

785 HARROW ROAD, SUDBURY, WEMBLEY

# நட்சத்திர இரவின் சில பக்கங்கள்

ஏப்ரல் 21ம் திகதி இலண்டனில் இடம் பெற்ற நட்சத்திர இரவு வெற்றிகரமாக அமைந்ததாக ஏற்பாட்டாளர்கள் மகிழ்ச்சியாக வெளியிட்டு உள்ளனர். அவர்களின் கணிப்பின் படி 7,000 பேர் விழாவில் கலந்து கொண்டு உள்ளனர். ஆனால் இலண்டன் விழாவிற்கு மறுதினம் பாரிசில் நடக்க ஏற்பாடு செய்யப்பட்ட விழா நடைபெறவில்லை.

### கதாநாயகிகள்

இலண்டனிற்கு வருவதாக கூறப்பட்ட மூன்று முக்கிய கதாநாயகிகளான சிம்ரான், ரம்பா, இஷாகோபிகர் ஆகியோர் நேரம் ஒழுங்கு செய்ய முடியாது போனதால் வரமுடியாது போனதாக நிகழ்ச்சியின் இறுதியில் கூறப்பட்டது. இது பலரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இவர்களிற்கு பதிலாக ரோஜா, சுவாதி, சார்லி ஆகியோர் வந்து இருந்தனர். பல மாதங்களிற்கு முன் திட்டமிடப்பட்ட இந் நிகழ்ச்சிக்கு அவர்கள் நேரம் ஒதுக்க முடியாது போன காரணம் பார்வையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட கூடியதாக இருக்கவில்லை.

### பார்வையாளர் கருத்து

இந் நிகழ்ச்சி பற்றி உதயன் சார்பாக பார்க்க சென்ற 20 பேரிடம் கருத்து கேட்ட போது 6 பேர் மட்டுமே நிகழ்ச்சி சிறப்பாக அமைந்ததாக கூறினர். 10 பேர் தாம் எதிர்பார்த்த அளவிற்கு நிகழ்ச்சிகள் அமையவில்லை என்றும் மூவர் நிகழ்ச்சிகள் தரமற்று இருந்ததாகவும் கூறினர். ஒருவர் கருத்து சொல்ல மறுத்து விட்டார். சிலர் சிங்கப்பூரில் நடாத்திய நிகழ்ச்சி நன்றாக இருந்ததாகவும் இலண்டன் நிகழ்ச்சி அவ்வாறு அமையவில்லை என்றும் கூறினர்.

### குழப்பமான வாழ்த்து

நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட கையேட்டில் இலங்கை தூதரகம் நிகழ்ச்சி பற்றி வாழ்த்து கூறியதும் பிரசுரிக்கப்பட்டு இருந்தது. அதில் பிரித்தானியாவில் இலங்கையர்கள் சிறப்புற ஓர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பல்தேசிய தன்மையை காட்டுவது பற்றியும் கலாச்சாரம், பண்பாடு பற்றியும் குறிப்பிடப்பட்டு இருந்தது. இலங்கை மண்ணில் பாதிக்கப்பட்டு புலம் பெயர்ந்து வந்தவர்களிற்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சியில் தாம் பாதிக்கப்பட காரணமானவர்களின் வாழ்த்து பிரசுரிக்கப்பட்டது பற்றி பெரும் அதிருப்தி வெளியிடப்பட்டது. இது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிற்கு பெரும் சிக்கலையும் ஏற்படுத்தியது.

### ஹோட்டலில் குழப்பம்?

நட்சத்திரங்கள் தங்கி இருந்த ஹோட்டலிற்கு ஆறு காரில் சென்ற சில இளைஞர்கள் அங்கு கத்தி கூச்சல் போட்டு அட்டகாசம் செய்ததாகவும் பின்னர் ஹோட்டல் நிர்வாகம் காவல்துறையை அழைத்து அவர்களை கலைத்ததாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்தி ஒன்று கூறுகிறது.

### பாரிஸ் நிகழ்ச்சி

இலண்டனில் பிரான்ஸ் தூதரகம் கலைஞர்களிற்கு விசா கொடுக்க மறுத்ததால் தான் பாரிஸில் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் இருந்து விசா பெற்று வராமல், ஆயிரக் கணக்கான பணத்தை செலவழித்து, பொறுப்பில்லாமல் ஒரு வர்த்தக நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தார்களா என்ற கேள்வி வேறு பல ஊகங்களிற்கு வழிவிட்டு சென்று உள்ளது.

இலண்டன், பாரிஸ் நிகழ்ச்சிகள் விளம்பரம் செய்யப்பட்ட பின், நிகழ்ச்சிக்கு அண்மை திகதி வரை உறுதி செய்யப்படவில்லை என ஓர் செய்தி கூறுகிறது. இது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிற்கும் திரு தியாகராஜனிற்கும் இடையே ஏற்பட்ட பேரம் பேசலின் விளைவாயும் இருக்கலாம் என்றும் இதுவே நடிகைகள் வராமைக்கும் காரணமாக இருந்து இருக்கலாம் என்றும் இந்திய கலைஞர்களை வைத்து நிகழ்ச்சி நடாத்தும் ஏற்பாட்டாளர் ஒருவர் குறிப்பிட்டார். இறுதியாக இலங்கை தூதரகத்தின் வாழ்த்து பிரசுரிக்கப்பட்டதும் அதனுடன் சேர்ந்த வேறு காரணங்களாலும் பாரிஸ் நிகழ்ச்சி நடைபெறாமல் போயிருக்கலாம் என ஊகங்கள் தெரிவிக்கின்றன.

### துண்டு பிரசுரம்

நட்சத்திர இரவை நடாத்தியவர்களையும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் எச்சரித்து துண்டு பிரசுரம் வெளியிடப்பட்டு உள்ளது.

# தமிழர்களின் பலம் :

மே மாதம் 4ம் திகதி இலண்டன் மேயரிற்கும் உள்ளாட்சி மன்றங்களிற்குமான வாக்களிப்பு நடக்க இருக்கிறது. தமிழ் மக்கள் அவர்களிற்கு உள்ள இந்த உரிமையை பயன்படுத்த வேண்டும். தமிழ் சமூகம் ஓர் பலமான சமூகமாக பிரித்தானியாவில் விளங்க வேண்டுமானால் அவர்கள் தமக்கு உள்ள அரசியல் உரிமைகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும். ஓர் பலமான சமூகமாக தமிழ் மக்கள் இருப்பது சிறுபான்மை சமூகங்களிற்கும் அதன் அடுத்த தலைமுறைக்கும் இன்றியமையாதது. "நாங்கள் இலங்கையில் கிடைத்த அரசியல் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டு இங்கு வந்திருக்கிறோம். இங்கேயாவுதல் பலமாக இருந்து எங்கள் உரிமைகளை காப்பாற்றி கொள்ள வேண்டும்" என்கிறார் இலங்கை தமிழ் கட்சி ஒன்றின் முன்னாள் அதரவாளர்.

# சத்தியநேசன்...

நிம்மதியாகவும் வாழ வேண்டும். அதற்கு உடனடியாக நிரந்தரமான சமாதான தீர்வு வர வேண்டும்.

உதயன்: இறுதியாக எமது வாசகர்களிற்கு என்ன கூற விரும்புகிறீர்கள்:

போல்: தமிழ் உணர்வுடன் தமிழனாக இருங்கள். தமிழனாக இருப்பதில் பெருமைப்படுங்கள். எமது அடையாளங்களான மொழி, கலை, கலர்ச்சாரம் என்பவற்றை பேணி உறுதியான ஓர் தமிழ் சமூகத்தை ஐரோப்பாவிலும் உலகிலும் கட்டி எழுப்புங்கள். உங்கள் பொது வாழ்க்கையை சமுதாய நோக்கில் வாழுங்கள். மேலும் பத்திரிகைகளை வாசியுங்கள்; அரசியலை கவனியுங்கள்; நல்லவற்றை பாராட்டி ஊக்கப்படுத்தவும் தவறுகளை சுட்டி காட்டவும் தயங்காதீர்கள்.

இந்த நீண்ட நேர்முகத்தை முடித்து கொண்டு நகரசபை கட்டடத்தை சுற்றி காட்டினார். அன்று உரும்பராய் தெருக்களில் சுற்றி வலம் வந்த அந்த இளைஞன் இன்றும் அதே துடிப்புடன் இப்போது நியுகாம் நகரசபையில் மக்கள் பிரதிநிதியாக வலம் வருவது, நிச்சயம் எமது சமூகத்திற்கு பெருமையே. பிரித்தானிய சமூகத்துடன் எமது தனித்துவத்துடன் நாம் இணைய வேண்டும் என்றும் அது நோக்கி நாம் பயணிப்போம் என்றும் உறுதி உடன் கூறி இருவரும் விடை பெற்று கொண்டோம்.

**ACCOMMODATION ROOMS available**

for NON-SMOKER & NON-DRINKER

Independent / Shared

in

Edgware

(With Car-parking facility)

Contact: 0181-952 5677

0181-903 7799

07939 116 787

## இலண்டனை சுற்றி

**கள்ள நோட்டு :** தமிழ் இளைஞர்கள் சிலர் கள்ள நோட்டுக்களை வியாபார நிலையங்களில் மாற்ற முற்பட்டு உள்ளனர். £20, £50 கள்ள நோட்டுக்களே பெருமளவில் புளக்கத்தில் உள்ளன. எப்போதும் பண நோட்டுக்களை பரிசீலித்து பார்க்கும் படி வங்கிகள் வலியுறுத்தி உள்ளன. கள்ள நோட்டுக்கள் இலேசானவையாகவும் பேப்பர் தன்மை உடையதாகவும் (கசக்கி பார்த்து தெரிந்து கொள்ளலாம்.) காணப்படும். அத்துடன் உண்மையான உலோக கம்பி கள்ள நோட்டில் இராது. இதனை உலோக கம்பி பகுதியில் சிறிது கிழித்து பார்த்து அறிந்து கொள்ளலாம். வெள்ளை பகுதியில் உள்ள அரசியின் தலை கள்ள நோட்டில் தெரியாது. மேலும் கள்ள நோட்டுக்களில் வர்ணம் கூடி அல்லது குறைந்து காணப்படும்.

**விளையாட்டு விழா :** ஐக்கிய தமிழர் அமைப்பு நடாத்தும் விளையாட்டு விழா தென்கிழக்கு இலண்டன் Dulwich College ல் மே மாதம் 28ம் திகதி நடைபெற உள்ளது. கடந்த ஆண்டில் இடம் பெற்ற நிகழ்ச்சி ஓரிரு இளைஞர்களின் காடைத்தனத்தினால் குழம்பியதை அடுத்து இவ் ஆண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட இருக்கிறது. மேலும் சந்தேகத்திற்குரியவர்களது நுழைவை தடுப்பதற்கு விழா ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குகளை மேற்கொண்டு உள்ளனர்.

**தொடரும் கொள்ளைகள் :** பேர்லிங்டன் வீதியில் வாழ்ந்து வரும் லெஸ்லி மொறிஸ் என்ற தமிழ் கிறிஸ்தவருடைய வீட்டிற்குள் அவர்கள் தேவாலயத்திற்கு சென்று வருவதற்கு இடையில் புகுந்து சூறையாடி உள்ளது ஓர் கும்பல். மதப்பற்று மிக்க மொறிஸ் தம்பதிகள் மார்ச் 26ம் திகதி ஞாயிற்று கிழமை மாலை 2.45ற்கு தேவாலயத்திற்கு சென்று 5.45ற்கு திரும்பி உள்ளனர். இந் நேர இடைவெளிக்குள் புகுந்த கும்பல் £3,000 பெறுமதியான நகைகளையும் £200 பணத்தையும் களவாடி உள்ளனர். இக்கொள்ளையர்கள் சமையல் அறையின் ஜன்னலை உடைத்து உட்புகுந்து தம் கை வரிசையை காட்டி உள்ளனர். சிறுக சிறுக சேமித்த தம் சேமிப்பை மூன்று மணி நேரத்தில் பறி கொடுத்த இந்த நடுத்தர குடும்பத்தினர் இன்னமும் இந்த அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. பொலிஸார் வந்து கை அடையாளங்களை பதிவு செய்து சென்று உள்ளனர்.

**நஸ்ட ஈட்டிற்கு நஸ்ட ஈடு :** BT நிறுவனத்தின் கொள்கை படி தொலைபேசி இணைப்பு வழங்க ஒத்துகொள்ளப்பட்ட திகதியில் இணைப்பு வழங்கப்படாவிட்டால், அவ்வாடிக்கையாளரிற்கு பின் வரும் ஓவ்வோர் நாளிற்கும் நஸ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். இதன் படி அண்மையில் தமிழ் குடும்பம் ஒன்றிற்கு £13,000 ற்கு மேல் நஸ்ட்ட ஈடு வழங்கி இருந்தது. ஆனால் இப்போது அவ்வாடிக்கையாளரிற்கு புதிய புதிய கட்டணங்களை அவர்களுடைய கட்டண சீட்டில் சேர்த்து வருகின்றனர். இதனால் அதிருப்தி அடைந்துள்ள அக்குடும்பத்தினர் இப்போது சட்ட ஆலோசனை பெற்று வருகின்றனர். இது பற்றி அக்குடும்ப தலைவர் உதயனிற்கு குறிப்பிடுகையில்," இப்படி வேறு யாரும் பாதிக்கப்பட்டு இருந்தால் அருகில் உள்ள நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புடனோ, அல்லது பிரஜைகளுக்கான ஆலோசனை அமைப்புடனோ தொடர்பு கொள்ளவும் " என குறிப்பிட்டார்.

**வெளியீடுகள் :** 14 புத்தகங்களின் வெளியீடுகள் ஏப்ரல் 15ம் திகதி ஈஸ்ற்ஹாமில் இடம் பெற்றது. இதில் நியூகாம் நகராட்சியாளர் திரு போல் சத்தியநேசன் அவர்களும் கலந்து கொண்டார். பல்வேறு தமிழ் ஊடகவியல் ஸதாபனங்கள் உட்பட 130 பேர்வரை கலந்து கொண்டனர். மேலும் மணிமேகலை பிரசுரத்தின் புத்தக கண்காட்சியும் இடம்பெற்றது.

**உதயன் :** இலண்டனில் வெளியிடப்பட்டு குறுகிய காலத்திலேயே பரவலான வாசகர்களை கொண்ட பத்திரிகையாக உதயன் உள்ளது. மேலும் தரமான பத்திரிகையாகவும் பரந்த விநியோகத்தை கொண்ட பத்திரிகையாகவும் உதயன் விளங்குவது குறிப்பிடத்தக்கது. தற்போது மேலதிக நிருபர்களை உதயன் வரவேற்கிறது. குறிப்பாக ரூரிங், ஈஸ்ற்ஹாம் ஆகிய பகுதிகளிற்கு நிருபர்கள் வரவேற்கப்படுகின்றனர். அவர்கள் விரும்பின் நிருபர்களாக இயங்குவதுடன் விளம்பர முகவர்களாக பகுதி நேரமாக செயற்படலாம். அல்லது பகுதி நேர விளம்பர முகவராக வேண்டுமானாலும் செயற்படலாம் என உதயன் நிர்வாகம் தெரிவிக்கின்றது.

## உடற்கட்டுமான மாநாடு

வரும் யூன் மாதம் 'Body Image Summit' நடக்க இருக்கிறது. அலங்காரதுறையில் உடல் மெலிந்த அழகிகளே மிகவும் வரவேற்கப்படுகின்றனர். இத்தன்மையானது அழகியல் என்பது உடற் பருமன் சம்பந்தப்பட்ட விடயமாக கணிக்கப்படும் அளவிற்கு சென்று உள்ளது. இதன் தாக்கம் இளம் பெண்களிடம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. பெண்கள் தம் பருமனை குறைக்க பல வழிமுறைகளை கையாள்கின்றனர். இதனால் உணவு உட்கொள்வது சம்பந்தமான நோய்கள் அதிகரித்து உள்ளது. இது விடயமாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இம்மாநாட்டின் நோக்கம்.


அலங்காரதுறையில் மிக மெலிவான பெண்களை நிறுத்தி அவர்களையே முன் உதாரணமாக காட்ட முனைதல் பெண்களின் சுய அடையாளங்களை பாதிப்பதாகவும் கருதப்படுகிறது. எதிர்காலத்தில் அலங்கார துறையில் மெலிவான பெண்களை மட்டும் வேலைக்கு அமர்த்தாமல் மற்றயவர்களையும் வேலைகளில் அமர்த்த அந்நிறுவனங்கள் நிர்ப்பந்திக்கப்படும். மேலும் சராசரி உடற்பருமன் உடைய பெண்கள் தம்மை பற்றி தாழ்வு மனப்பான்மை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஒரு பகுதி பெண்களை தாழ்வுபடுத்தி வைத்துள்ள அலங்கார துறையில் இனிமேல் மாற்றங்கள் ஏற்பட வாய்புகள் உள்ளதாக கருதப்படுகிறது.

## பெயர் மாற்றம் தேவை

தாங்கள் செய்யும் வேலைகளின் பெயர்கள் மாற்றப்படுவதை பலரும் வரவேற்கின்றனர். தற்போது உள்ள தொழிற் பெயர்கள் காலம் கடந்தவையாகவும் அவர்கள் செய்யும் தொழிலின் மதிப்பை வழங்காதவையாகவும் உள்ளதாக அண்மையில் தொழில் முகவர் ஆலோசனை அமைப்பு எடுத்த கருத்து கணிப்பு தெரிவிக்கிறது. தொழிலாளர்கள் சம்பள உயர்விலும் தொழிற் பெயர்களிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும் அக்கருத்து கணிப்பு தெரிவிக்கிறது. நல்ல தொழிற் பெயர்களை வழங்குவதன் மூலம் தொழிலாளர்களின் வேலையின் பெறுமதி மதிக்கப்படுவதாக தொழிலாளர்கள் உணர்கிறார்கள் என்றும் இதனால் அவர்களிற்கு ஊக்கம் ஏற்பட்டு வினைத்திறன் அதிகரிப்பதாக 'The Office Jungle' நூலின் ஆசிரியர் யூடி ஜேம்ஸ் தெரிவித்து இருக்கிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில் தொழிற் பெயர்கள் அவர்கள் செய்யும் வேலையை சிறந்த முறையில் வெளிப்படுத்துவனவாக இருக்க வேண்டும். வெறும் அர்த்தமற்ற சம்பந்தமில்லாத பெயர்களாக இருக்க கூடாது என்றும் குறிப்பிட்டார்.

சில தொழிற் பெயர்களையும் அதன் புதிய வடிவத்தையும் இங்கு காணலாம். Clerks - Data Storage Specialists, Key Board Workers - Digital Data Executive, Photocopying Clerk - Reprogaphics Engineer, Secretaries - Executaries, Post Room Worker - Office Logistics Co-Ordinator.

## வோல்தம்ஸ்ரோவில் இளம் பெண் கொலை




Whipps Cross Rd உடன் இணையும் Holly Bush Hill வீதியில் இருந்து 200 யார் உள்ளே எப்பிங் காட்டு பகுதியின் தொடர்ச்சியில் 20 - 30 வயதுடைய இளம் பெண் ஏப்ரல் 4ம் திகதி கொலை செய்யப்பட்டு உள்ளார். இவரது உடலை காலையில் மீட்ட பொலிசார் பிரேத பரிசோதணையின் போது பல உடற்காயங்கள் காணப்பட்டதாக தெரிவித்து உள்ளனர். மேலும் தலை பகுதியிலும் காயம் காணப்பட்டது. இப் பெண் வெள்ளை அல்லது கலப்பின பெண்ணாக இருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

## கட்டணங்களை சரிபார்த்து கொள்ளுங்கள்

மின்சாரம், எரிவாயு உட்பட அனைத்து கட்டணங்களின் சிட்டையையும் சரிபார்த்து கட்டணங்களை செலுத்தவும். எமக்கு கிடைத்த தகவல்களின் படி ஓர் தமிழ் குடும்பத்தினர் தமது அயல் வீட்டிற்கும் சேர்த்து எரிவாயுவிற்கான கட்டணத்தை செலுத்தி உள்ளனர். இன்னோர் இடத்தில் மின்சார நிறுவனத்தின் தவறான இணைப்பால் விரயமாக்கப்பட்ட மின்சாரத்திற்கும் சேர்த்து கட்டணம் செலுத்தி உள்ளனர் இன்னோர் தமிழ் குடும்பத்தினர்.

மேலும் தற்போது எரிவாயு, மின்சார விநியோகத்தில் உள்ள தன்னாதிக்கம் நீக்கப்பட்டு உள்ளதால் வெவ்வேறு நிறுவனங்கள் போட்டியில் இறங்கி உள்ளன. இதனால் நுகர்வோரிற்கு மிகுந்த நன்மை ஏற்பட்டு உள்ளது. இப்போட்டியால் அவற்றில் பயன்படுத்தப்படும் அலகிற்கான கட்டணம் குறைந்து உள்ளது. ஆயினும் வெவ்வேறு நிறுவனங்கள் வெவ்வேறு கட்டணங்களை அறவிடுகின்றன. இவற்றை கவனித்து பயன்பெற்று கொள்ளவும்.

மேலும் எதிர் காலத்தில் இப்போது செலுத்தி வரும் இணைப்பு வாடகை குறைக்கப்படலாம் அல்லது இல்லாமல் ஆக்கப்படலாம் என தெரியவருகிறது. அப்படி இல்லாமல் ஆக்கப்பட்டால் நீங்கள் பயன்படுத்தும் அலகிற்கு மட்டும் கட்டணம் செலுத்தினால் போதும். இதன் மூலம் ஆண்டிற்கு சில நூறு பவுண்களை சேமிக்க முடியும்.

## வழக்கில் £70,000 தமிழ் உரிமையாளரிற்கு செலவு

'சக்தி எஸ்டேட்' நிறுவனத்திற்கு எதிராக ஓர் வெள்ளை பெண் தொடுத்த வழக்கு அந்நிறுவனத்திற்கு எதிராக தீர்க்கப்பட்டது. சட்பறியில் உள்ள றக்பி வீதியில் உள்ள வெள்ளை இன பெண்ணின் வீட்டை சக்தி நிறுவனம் 1993ல் இருந்து 1997 வரை பொறுப்பெடுத்து முகாமைத்துவம் செய்தனர். இவ்வீட்டை அக்கால பகுதியில் ஓர் தமிழ் குடும்பத்திற்கு சக்தி நிறுவனம் வாடகைக்கு வழங்கி இருந்தது. 1997ல் அவ்வீட்டை மீள பொறுப்பேற்ற அப்பெண் வீடு மிகவும் சேதப்படுத்தப்பட்டு இருப்பதாக கூறி சக்தி நிறுவனத்திடம் நஸ்ட ஈடு கோரி வழக்கு தொடுத்திருந்தார். இவ் வழக்கு 2000ம் ஆண்டு ஏப்ரல் இறுதி பகுதியில் முடிவுக்கு வந்தது. வழக்கில் அப் பெண்ணிற்கு நஸ்ட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்த வழக்கில் சட்ட செலவுகள் நஸ்ட ஈடு எல்லாமாக சேர்த்து 'சக்தி எஸ்டேட்' ற்கு £70,000 செலவு வந்து உள்ளது.

## முதல் குடும்பத்தினரின் புதிய வரவு

பிரித்தானிய முதற் குடும்பமான ரொனி, செறி தம்பதிகளின் நான்காவது குழந்தைக்கு மே 21ம் திகதி பிரசவ நாள் குறிக்கப்பட்டு உள்ளது. மிகவும் மகிழ்ச்சி கரமான இவர்கள் தமக்கு என்ன குழந்தை பிறக்க உள்ளது என அறிய விரும்பவில்லை. ஆச்சரியப்படவே விரும்புகிறார்கள். ஆனால் தமக்கு பெண் குழந்தையே கிடைக்க ஆசைப்படுவதாக கூறி உள்ளனர்.

## இலண்டனில் ஏ ஆர் ரகுமான்

இசை அமைப்பாளர் ரகுமான் பிரித்தானியாவில் தங்கி உள்ளார். மேற்குலகின் இசைத் துறையிலும் ஈடுபட்டு உள்ள இவர் இது தொடர்பாகவே இலண்டன் வந்து உள்ளதாக தெரியவருகிறது. ஆனால் இது ஓர் தனிப்பட்ட விஜயமாகையால் பொது வைபவங்களில் கலந்து கொள்ளமாட்டார் என்றும் தெரியவருகிறது.

விளம்பரம் ஓர் நன்கொடையோ அல்லது செலவோ அல்ல! அது ஓர் முதலீடு

**உதயனில் விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வியாபாரத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.**

**உங்கள் வியாபாரத்தை பெருகச் செய்யும்.** அது உங்கள் வியாபார முயற்சிக்கு இன்றியமையாதது.

இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வியாபாரத்தின் வளர்ச்சிக்கு உதவும்.

முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள்
ஓடர்களுக்கு செய்து
கொடுக்கப்படும்.
பொன்னுருக்கலுக்கு
ஏற்ற சகல
ஒழுங்குகளும் செய்து
கொடுக்கப்படும்.
உங்கள்
எண்ணங்கள்
எங்கள் கை
வண்ணத்தில்



ROYAL JEWELRY

றோயல் ஜுவலரி

287, HIGH STREET NORTH
EASTHAM - MANOR PARK
LONDON E12 6SL
TEL: 020 8472 5500

# பாலியல் வல்லுறவு புதிய நடைமுறை

பாலியல் வல்லுறவு வழக்குகளில் புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தற்போதைய நடைமுறைப்படி குற்றம் சுமத்துபவர்களே குற்றத்தை நீரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்கப்படும் வரை குற்றம் சுமத்தப்பட்டவர் நிரபராதியாகவே கணிக்கப்படுவார். ஆனால் பாலியல் வல்லுறவு வழக்குகளில் மட்டும் இம்முறையை மறுதலையாக மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதன் படி குற்றம் சுமத்தப்பட்ட ஆண் தான் பாலியல் வல்லுறவில் ஈடுபடவில்லை என்பதை அல்லது ஈடுபட்டு இருந்தால் குற்றம் சுமத்தியவரின் சம்மதத்துடன் தான் ஈடுபட்டார் என்பதையும் நிருபிக்க வேண்டும்.

பாலியல் சட்டங்களை மறுபரிசீலனை செய்யும் அரசு 'Date Rape' யும் பாரிய குற்றமாக கணிக்க உள்ளதுடன் தேவையற்ற வாய் மூலமான பாலியல் செயற்பாடுகளையும் பாலியல் வல்லுறவினுள் சேர்க்க உள்ளது. மேலும் குழந்தைகளையும் வயோதிபர்களையும் பாதுகாக்க மேலதிக நடைமுறைகள் கொண்டுவரப்பட உள்ளது. இவற்றுடன் இப்போது அண்மை காலமாக அதிகரித்து வரும் பாலியல் அடிமை வியாபாரத்தை முறியடிக்க புதிய வட்ட வரைபுகளும் அறிமுகப்படுத்தப்படலாம் என தெரிகிறது.

பாலியல் வல்லுறவு வழக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கூடுதலான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தலாம் என்பதனாலேயே இம்மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. இப்போது 10 வீதத்திலும் குறைவான பாலியல் குற்றவாளிகளே தண்டனையை பெறுகின்றனர். புதிய வரைபுகள் ஏப்ரலில் வெளியாவதை தொடர்ந்து இவ்வாண்டு முழுவதும் இது பற்றிய மக்கள் அபிப்பிராயங்கள் விவாதங்கள் நடைபெறும்.

மிகவும் சிக்கல் தன்மையும் உணர்வுகள் சம்பந்தப்பட்டதுமான பாலியல் வழக்குகளில் ஏற்படுத்தப்பட உள்ள இம்மாற்றங்கள் அவற்றின் சிக்கல் தன்மை காரணமாக மிக அவதானமாகவே கையாளப்படுகின்றது. அண்மையில் பாலியல் வல்லுறவு குற்றம் சுமத்தப்பட்டு 15 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்ட நபர், இப்போது அப்படி ஓர் சம்பவமே நடைபெறவில்லை என்று தெரியவந்து விடுவிக்கப்பட்டு உள்ளார். அண்மையில் தெரியவந்த போலியாக சோடிக்கப்பட்ட இரண்டாவது பாலியல் வல்லுறவு சம்பவம் இதுவாகும்.

குறிப்பு : கொசோவோவில் பணியாற்றும் வெளிநாட்டு உதவிநிறுவன பணியாளர்கள், பாலியல் அடிமைகளாக்கப்பட்ட பெண்களை, தம் பாலியல் தேவைகளிற்கு பயன்படுத்தி உள்ளனர். இப் பாலியல் அடிமைகள் ஐ.நா வின் காவல்துறையினரால் பின்னர் மீட்கப்பட்டனர். இங்கு பெண்கள் ஓர் இரவில் 20 பேர்வரை பாலியல் இன்பம் கொடுக்க பணிக்கப்பட்டு மிருகத்தனமாக நடத்தப்பட்டு உள்ளனர்.

# £10,000 பிணை திட்டம் கைவிடப்பட்டது

இந்திய துணை கண்டத்தில் இருந்து பிரித்தானியாவிற்கு வருவோாிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட £10,000 பிணைத்திட்டம் பெரும் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டு உள்ளது. இந்திய துணைக்கண்ட நாடுகளான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய நாடுகளில் இருந்து வருவோர், மீண்டும் தம் நாடுகளிற்கே செல்லமாட்டார்கள் என அதிகாரிகள் நம்பும் இடத்து; இங்கு வருவோர் சார்பாக, இங்கு உள்ளவர் பிணையாக £10,000 செலுத்த வேண்டும்; என்ற திட்டத்தை பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால் இது ஓர் இனவாத திட்டம் என பல்வேறு சிறுபான்மை குழுக்களாலும் அவர்களிற்கு ஆதரவான பா.உ முன்வைக்கப்பட்ட பாரிய எதிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து," நாங்கள் இத்திட்டத்தை கைவிடுகிறோம் அல்லது நிச்சயம் இருப்பில்




வைப்போம்." என தெரிவித்து உள்ளார் சிரேஷ்ட அமைச்சர் மார்கிரெட் பெக்கற்ட்.

மார்ச் 7ம் திகதி உதயன் பத்திரிகையில் 'இது ஓர் இனவாத திட்டம்' என்ற முன்பக்க தலைப்புடன் நாம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இது ஓர் சைவக் கொள்ளை

சேர்பிற்றனில் வசிக்கும் தபாலக உரிமையாளர் வீட்டில் புகுந்த கும்பல் பெறுமதியான பொருட்கள் எல்லாவற்றையும் சுருட்டி கொண்டு பாய்ந்துவிட்டனர். பெப்ரவரி மாதம் 25ம் திகதி வைபவம் ஒன்றிற்கு சென்று வருவதற்கு இடையே இக்கொள்ளை இடம் பெற்று உள்ளது. மாலை ஏழு மணிக்கு வீட்டை விட்டு புறப்படும் போது பல பவுண்கள் பெறுமதியான நகைகள், பணமாக ஆயிரம் பவுன், விடியோ கமரா, பெறுமதியான கைக்கடிகாரம், £14,000 பெறுமதியான BMW இவை எல்லாம் சொந்தமாக இருந்தது. ஆனால் மாலை 10 மணிக்கு, மூன்று மணி நேரத்தின் பின் வீடு திரும்பும் போது அவர்களிற்கு அங்கு எந்த பொருளும் இருக்கவில்லை. வீட்டிற்குள் பலாத்காரமாக புகுந்த இக்கொள்ளை கூட்டம் தாலியை தவிர ஏனைய அனைத்து பெறுமதியான பொருட்களையும் கொள்ளை இட்டு உள்ளனர். தமது கொள்ளையை திறம்பட செய்தவர்கள் மறந்தும் கூட போலி அணிகலன்களை (கில்லிட்டு) எடுக்கவில்லை.

சேர்பிற்றன் பகுதியில் இப்படி கொள்ளை இடம்பெறுவது முதற்தடவை அல்ல. இப்பகுதியில் சற்று வசதியானவர்களின் வீடுகள் குறிவைத்து கொள்ளையிடப்பட்டு உள்ளது. ( உதயனின் கடந்த இதழிலும் சேர்பிற்றனில் வதியும் பிரமிட் விநியோக உரிமையாளர் வீட்டில் இடம் பெற்ற கொள்ளை பற்றி குறிப்பிட்டு இருந்தோம். ) அப்பகுதியில் ஓர் கும்பல் திட்டமிட்டு இரகசிய முறையில் விபரங்களை சேகரித்து திறம்பட தம் கை வண்ணத்தை காட்டி வருவதாக மேலும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காயத்திரி அம்மன் ஆலய சிறப்பு விழா

எட்வெயர் காயத்திரி அம்மன் ஆலயத்தில் சித்திரா பௌர்ணமி விழா ஏப்ரல் 18ம் திகதி சிறப்பாக நடந்தேறியது. பக்தர்கள் அம்மன் அருளுடன் அருள் அன்னை காயத்திரியிடமும் ஆசீர்வாதம் பெற்று சென்றனர். அதே தினத்தில் காயத்திரி அம்மன் ஆலய திருப்பணிக்காக நிதி திரட்டும் வைபவமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு யூன் 30ம் திகதி நகராட்சி மன்றம் கோயில் திருப்பணிக்கான அனுமதியை வழங்கியது.

நகராட்சி மன்றத்திற்கு செலுத்த வேண்டிய பணமும் திருப்பணிக்கான செலவும் மிக பெரும் தொகையாகையால் இத்திருப்பணியை பொறுப்பேற்று நடாத்தும் G.R.K'S Trust பக்தர்களை இத் திருப்பணியில் தங்களால் இயன்ற அளவு உதவி செய்யும் படி வேண்டுகின்றனர். உதவி செய்ய விரும்புவோர் பணமாகவோ, காசோலையாகவோ ( காசோலை G.R.K'S Trust ற்கு எழுதப்பட வேண்டும். ) அல்லது பொருளாகவோ தமது அன்பளிப்புகளை செய்யலாம். மேலும் விரும்புபவர்கள் தமது சேவைகளையும் ஆலய திருப்பணிக்கு வழங்கலாம். நிர்மாண வேலைகள், நிதி சேகரிப்பு இவற்றில் தம் சேவையை வழங்க விரும்புபவர்களும் வரவேற்கப்படுகின்றனர். நிதி சேகரிப்பில் ஈடுபட விரும்புபவர்கள் டாக்டர் குமார் (079 3911 6787) அவர்களுடனோ அல்லது திரு பிள்ளை (079 5768 1944) அவர்களுடனோ தொடர்பு கொள்ளலாம். ஆலய திருப்பணி பற்றிய மேலதிக விபரங்களிற்கு 020 8905 7775 அல்லது 020 8951 4777 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொலைதந்தி இலக்கம் 020 8952 5677.

குறிப்பு : அன்னை காயத்திரி அம்மன் ஆலயத்தில் உள்ள மண்டபத்தை ஆன்மீக நிகழ்ச்சிகளிற்கு வழங்க ஆலய நிர்வாகத்தினர் முன் வந்து உள்ளனர்.




## அறிவிப்பு

எடச்வெயர் ஸ்ரீறி காயத்திரி அம்மன் ஆலய திருப்பணிக்கு தொண்டர்கள் நிதி சேகரிக்க உங்கள் இடம் தேடி வருகிறார்கள். அவர்களை வரவேற்பபதற்கு நன்றி அத்துடன் அவர்களிற்கு தாராளமாக நிதி வழங்கி ஆலய பணிகள் நன்கு நடைபெற உதவவும். இப்போது அவசர தேவையாக பிரதான வீதிப்பக்கம் வாசல் போட £4,000 ம் பெயர் பலகை குறியீடு செய்வதற்கு £2,600 உள்ளது. இதனை முழுமையாகவோ பகுதியாகவோ உபயம் செய்ய விரும்புபவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றார்கள் - ஸ்ரீ எடச்வெயர் அம்மன் ஆலய திருப்பணி குழு.

# e - Commerce நோக்கி தமிழர்கள்

இணைய வலைய வர்த்தகத்தில் தமிழர்களும் காலடி வைக்க ஆரம்பித்து விட்டனர். dot.com உலகில் தமிழர்களின் நுழைவு தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது என இணைய வலைய வர்த்தக ஆலோசகர் தெரிவிக்கிறார். இன்றைய கணணி தொழில் நுட்பத்தின் அனைத்து அனுகூலங்களையும் பயன்படுத்துவதால் மட்டுமே நிறுவனங்கள் பொருளாதாரத்தில் ஸ்தீரணமான ஓர் இடத்தை பிடித்து முன்னணியில் திகழ முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார். இந்த வகையில் 'HALL4HIRE' போன்ற தமிழ் மக்களிடையே இருந்து உருவாகின்ற நிறுவனங்கள் சிறந்த முன் உதாரணமாக அமையும் என்பதையும் அவர் சுட்டி காட்டினார்.

இவ்வாண்டு சேவையில் ஈடுபட ஆரம்பித்த இவ் இணைய வலைய நிறுவனம் விரல் நுனிகளிலேயே ஓர் வைபவத்திற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்யும் வகையில் கட்டமைக்கப்பட்டு உள்ளது. ஓர் வைபவத்திற்கு என்ன தேவை என்று கருதப்படுகிறதோ அத்தனையும் அங்கு உண்டு. மேலும் இந் நிறுவனம் பிரித்தானியாவின் எந்த பகுதியில் வேண்டுமானாலும் மண்டபங்களை ஒழுங்கு செய்யும் வசதியை கொண்டு உள்ளது. எதிர்கால வைபவங்களில் விருந்தாளிகள் வருவதை மட்டும் உறுதிப்படுத்தினால் போதும் ஏனைய அனைத்து விடயங்களையும் 'HALL4HIRE' நிறுவனம் செய்து முடிக்கும் என இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் தெரிவிக்கின்றார். மேலதிக விபரங்கள் : WWW.HALL4HIRE.COM. 020 7252 4848


## உதயன் பற்றி......

**About UDHAYAN...**

மூத்த-நிருபர் - T.Jeyabalan
நிருபர் - Naherathan
விளம்பர மேலாளர் - T.P.Pillai

ஆசிரியர் குழு
Published in London by
(Global News Media) GNM (P) LTD.

"GEMINI HOUSE"
25/27 High Street Edgware
Middlesex HA8 7EE




செய்தி மற்றும் விளம்பர தொடர்புகளுக்கு:
Tel: 0181 905 7775
Tel/Fax: 0208 952 5677
e-mail: thelondon@udhayan.freeserve.co.uk



- Please send us the Advertising Matter/News Articles to our e-mail or in a floppy diskette.
-Pictures should be in tif. format for best results.
-For any technical doubts please contact graphics designer Swamy in one of the above mentioned telephone numbers.

# நேர்மையற்ற வழக்கறிஞர்கள்



வழக்கறிஞர்கள் மீதான குற்றசாட்டு தற்போத அதிகரித்து உள்ளது. செய்யும் வேலைக்கு மேலதிகமாக பணம் பெறுவது, சேவை பெறுபவருடன் சரியான தொடர்புகளை மேற்கொள்ளாமை, வேலைகளை இழுத்தடிப்பது, சேவை பெறுபவரின் பணத்தை கையாடுவது போன்றன பொதுவான குற்றச்சாட்டுகளாக உள்ளது. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் முதல் மூன்றும் தமிழ் வழக்கறிஞர்களின் மீது, தமிழ் மக்களால் பொதுவாக வைக்கப்படும் குற்றச்சாட்டாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பச்சை படிவத்தில்( Legal Aid Form) கையொப்பம் வாங்கிவிட்டு, தாம் எமக்கு இலவசமாக வேலை செய்வதாக பல வழக்கறிஞர்கள் நடந்து கொள்வதாக தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

மேலும் செய்யும் வேலைக்கு மேலதிகமாக பணம் பெறுவதனை விசாரிக்க உதயன் பத்திரிகை எழுந்தமானமாக சில தமிழ் சட்ட நிறுவனங்களிற்கு தொலைபேசியில் ஓர் பொதுமகனாக, நிரந்தர வதிவிட உரிமை (PR) பெற்றுதர எவ்வளவு முடியும் என விசாரித்தோம். அவர்கள் வழங்கிய செலவு £100 ல் இருந்து £300 வரை சென்றது. ஒரு சில சட்ட நிறுவனங்கள் மட்டும் நீங்கள் நேரடியாக சென்று செலவில்லாமல் அதனை செய்து கொள்ளலாம் என்ற ஆலோசனையை வழங்கினர்.

தமிழ் சட்ட நிறுவனங்கள் ஈழத் தமிழர் அல்லாதோரிற்கு அவர்கள் ஈழத் தமிழர் இல்லை என்று தெரிந்தும் ஈழத் தமிழர் என்று பொய் கூறி, அப் போலிகளிற்காக ஆஜராகி வருவதாக தமிழ் அகதி அமைப்புகள் மறைமுகமாக குற்றம் சாட்டுகின்றன. இப்படியான போலிகள் வழக்கு வெற்றி தோல்விகளை பற்றி கவலைப்படாமல் தலை மறைவாகிவிடுவதுடன்; சில காலத்தின் பின் தமது வேலை முடிந்ததும் தாம் வந்த நாட்டிற்கே சென்றுவிடுவார்கள். இவர்கள் இவ்வாறு செய்யும் போது இவர்களுடைய பதிவுகள் ஈழத் தமிழர்களாக கணிக்கப்பட்டு உண்மையில் பாதிக்கப்பட்டு வரும் ஈழத் தமிழர்களுடைய நலன்களை பாதிப்பதுடன் அவர்கள் பற்றிய பிழையான மதிப்பீடுகளிற்கு வழிகோலும் என்றும் இவ் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

1997ல் இருந்து வழக்கறிஞர்கள் மீதான முறைப்பாடுகள் 20% ஆல் அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் வழக்கறிஞர்கள் மீது 20,352 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. Law Society ன் ஓர் உட் பிரிவான Office for the Supervision of Solicitors (OSS) இப்போது இம் முறைப்பாடுகளை விசாரித்து வருகிறது. ஆனால் இவ் அமைப்பு சட்ட அமைப்பின் பிரிவாக இருப்பதால் வழக்கறிஞர்களிற்கு மாறாக செயற்படுவதில், மிகுந்த தயக்கம் காட்டுகிறது. மேலும் குற்றச்சாட்டுகள் உடன் விசாரிக்கப்படாது தேங்கி வினைத்திறன் அற்ற அமைப்பாக உள்ளது. இந்த நிலை மாற்றப்பட்டு வழக்கறிஞர்களின் குற்றச்சாட்டுகள் சட்டத்துறை சம்பந்தப்படாத,

உதயன்

# தேர்தல் வெற்றிக்கு...

இந்த வெப்ப காற்று பல்வேறு துன்பங்களிற்கும் சித்திர வதைக்கும் தப்பி தம் உயிர்களை காப்பாற்ற வந்த அகதிகளை மிகவும் வாட்டி வதைக்கிறது. கடந்த ஆண்டு முடிவில் 71,000 ற்கும் அதிகமான தஞ்ச விண்ணப்பங்கள் பிரித்தானியாவில் பதிவாகி உள்ளது. மேலும் இந்த ஆண்டு முதற் கால் பகுதியில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்து உள்ளவர்கள் எண்ணிக்கை, கடந்த ஆண்டின் இதே கால பகுதியை காட்டிலும் அதிகரித்து இருப்பதாக உள்துறை அமைச்சின் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. இதனை பிரித்தானியாவிற்கு மட்டுமேயான பெரிய பிரச்சனையாக முழங்கி தமக்கு ஆதாயம் தேடும் சாக்கடை அரசியலில் கொன்சவேடிவ் குதித்து உள்ளது.

**'custard pie' வீசப்பட்டது :**

அகதிகளிற்கு எதிரான நிலைப்பாட்டை எப்போதும் வெளிப்படுத்தும் விடகொம் ஓர் இனவாதியாகவே சிறுபான்மை சமூகங்களால் இனம் காணப்படுகிறார். விடகொம்மினதும் கட்சியினதும் இனவாத போக்கை கண்டித்து; ஏப்ரல் 27ம் திகதி ஒக்ஸ்போர்ட்டில் அவரது நூல் கையெழுத்திடும் நிகழ்ச்சியின் போது எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்பட்டது. மேலும் விடகொம்மின் மீது 'custard pie' வீசப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தை ' Biotic Baking Brigade ' என்ற அமைப்பு ஒழுங்கு செய்து இருந்தது. இதனை தொடர்ந்து நடுத்தர வயதுமிக்க ஓர் ஆணும் பெண்ணும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட பெண் தான் அவரை காயப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் செய்யவில்லை, இனவாதம் பேசும் அரசியல் வாதிகள் தப்பித்து கொள்ள முடியாது என்பதை உணர்த்தவே அப்படி செய்தேன் என்று கூறி உள்ளார்.

**யாரை கைது செய்கிறார்கள் ?**

சிலிநாட்டின் முன்னாள் சர்வாதிகாரியும் 3,000 பேருடைய உயிரிழப்புக்கு காரணமானவருமான 'Pinochet' இலண்டனில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த போது அவரை விடுதலை செய்யும் படி கொன்சவேடிவ் குரல் எழுப்பியதுடன்; அவரை தடுத்து வைத்து இருப்பது அநீதியானது என்றும் அறிவித்தனர். இன்று அதே 'Pinochet' ஆட்சி நடாத்தி இருந்தால் அவர் ஆட்சியில் இருந்து தப்பி வருபவர்களை எல்லாம் தடுத்து வைக்க குரல் கொடுப்பார்கள் இந்த கொன்சவேடிவ்கள் என மனித உரிமைவாதிகள் தெரிவித்து உள்ளனர்.

**பிரசாந் நைற்றில் ஹெக் :**

வில்லியம் ஹெக் சிறுபான்மை இன வாக்குகளை கேட்பதற்கு அச் சமூகங்களின் வைபவங்களை பயன்படுத்த தவறுவதில்லை. அண்மையில் நடைபெற்ற பிரசாந்த் நைற் நட்சத்திர விழாவிற்கு வாழ்த்து தெரிவித்து இருக்கும் அவா; பிரித்தானியாவின் பல்தேசியஇன சமூகம் பற்றி மகிழ்ச்சி தெரிவித்து இருப்பதுடன் அவர்களின் வளர்ச்சியையும் பாராட்டி உள்ளார். இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அரசியல் விஞ்ஞான மாணவர் இரவீந்திரன்," பிரசாந்த் நைற்றிக்கு வந்தவர்களில் 99% பேரும் பாஸ்போட்டை கிளித்து விட்டு இலண்டனிற்குள் இறங்கியவர்கள் தான். இப்போது வாழ்த்தும் இதே வில்லியம் ஹெக் தான் எனது உறவுகள் உயிரை காப்பாற்றி கொள்ள வந்தால் சிறையில் அடைப்பேன் என்றும் கூறி இருக்கிறார்" என்று தெரிவித்தார். சிறுபான்மை இனங்களை தமக்கு தேவையான போது மட்டும் சாதகமாக பயன்படுத்துவது பற்றி தற்போது விழிப்புணர்வு ஏற்பட்டு



உள்ளது. செறி பிளேயர் சேலை கட்டுவதாலேயோ, பியோன் ஹெக் பஞ்சாபி அணிவதாலோ மட்டும் திருப்திப்படும் நிலையில் இன்று பிரித்தானிய ஆசியர்கள் இல்லை என்பதை அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் கட்சிகளிடம் இனத்துவம் பற்றிய உறுதியான கொள்கையை கேட்கின்றனர். இரட்டை வேடத்தை விட்டு விட்டு வாழ்த்து செய்தியா? அல்லது தடுத்து வைப்பதா என்பதை ஹெக் முடிவு செய்ய வேண்டும் என்று இரவீந்திரன் மேலும் கூறினார்.

# உலக அழகி...

கிடைக்கும் என்று அதன் தலைமையாளர் தெரிவித்து இருக்கிறார்.

இந்தியா கடந்த 5 ஆண்டில் 3 Miss World ஐயும் ஓர் Miss Universe Pagent ஐயும் வழங்கி உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆண்டிற்கு 900 படங்களை உருவாக்கும் ஹொலிவூட்டில் தான் இவ் அழகிகள் தமது விருதை தொடர்ந்து குவிப்பது வழக்கம். Yukta Mookhey யும் தனக்கு நல்ல கதை அமைந்தால் நடிக்க போவதாக கூறும் இவர் தனது ஆறு அடி உயரத்திற்கு ஏற்ற கதாநாயகன் கிடைப்பது கடினமாக உள்ளதாக கூறுகிறார். சத்தியராஜிற்கு நிச்சயம் இவருடன் நடிக்கும் சந்தர்ப்பம் உண்டு என நம்பலாம். இந்திய படங்கள் பற்றி கருத்து கூறும் போது, அவை இந்திய கலாச்சாரத்தின் அழகான பக்கத்தையே காட்டுவதாக கூறினார்.




Rafiki WHOLESALE LTD

வர்த்தகர்களுக்கு அறியதோர் NON-FOOD GROCERY CASH & CARRY வெம்லியில்

UNIT 14 HALLMARK TRADING ESTATE

FOURTHWAY WEMBLEY

TEL: 020 8902 8903

FAX: 020 8903 6161

NEW Cash & Carry in Wembley

OPEN MON-FRI 10AM-6PM SUN 8AM-2PM SAT CLOSED




Kodak upto 60% off trad
GA 135.36 - £1.4
Yellow Dividers 8's - chea
Dish cloths 8's - cheap
Mugs & Drinking Glasses
RAYWARE Glasses
now in stock

SuperSoft Cares Toilet Tissues £4.99 pack of 4x10 sell at 79p make 26% P.O.R. beat the superstore at this price

Batteries uracell AA (English) pack of 4 95p Unbeatable prices on Duracell Panasonic and Camera Batteries

Charm Air Refreshner £3.60 per dozen 300ml sell at 49p each make 28% P.O.R.

Pocket Tissues £6.99 for 25 packs pack of 10's sell at 49p for 10 and make 88% P.O.R.

Talent Kitchen Towels £3.75 pack of 6x4 sell at 99p

Silky Tights £2.65 for 6 All Colours 15 Denier Retailer 79p

Refill Pads 80 Sheets £3.48 per dozen 29p each Plus a wide variety of Stationery

Ladies Umbrellas Printed 95p Golf Umbrellas £1.30

Wall Clocks 70p Pocket Calculators 67p

Toiletries: Shampoo, Foam Bath, Contioners, Razors, Deodorants, Soaps, Tootpaste, Tooth Brushes

Stationery: Refill pads, Plastic wallets, Graph Paper pads, Invoice Receipt books, Chalks, Pencil cases, Fountain Pens, Envelops

Electrical: Films, Video Cassettes, Batteries, Light Bulbs, Camera Batteries, Audio Cassettes, Disposable Cameras, Torches

Household: Air Refreshner, Kitchen Toilet rolls, Bleach, Liquid Soap, Kitchen Utensils, Fabric Conditioner, Disinfectant, Black Bags

Int. Phone cards 27% Discount ring & pick service available: Fortune, First National, Favourite, Hot, Alpha Blue Asia/Africa, Cheers Africa Cheers Asia, One Voice, One Shot

Hoisery: Full range of tights, Childrens tights, Slouch socks, Mens Handkechiefs, Sports socks, Gloves, Mens socks, Ladies Handkerchiefs

Fancy Goods: Seasonal Goods, Mirrors, Cutlery, Fancy Clocks, Glasses, Umbrellas, Kitchenware, Various Porceain Figureines

# கராச்சியில் இலண்டன் தூதுக்குழு "காஷ்மீரிற்கு சுயநிர்நய உரிமை"

ஏப்ரல் நடுப்பகுதியில் பாகிஸ்தான் சென்று திரும்பி வந்த நியுகாம் நகராட்சி மன்ற தூது குழுவில் ஒருவரான, நகராட்சியாளர் திருவாளர் போல் சத்தியநேசன் தனது கருத்தால் அங்குள்ள தேசிய பத்திரிகைகளின் வரவேற்பை பெற்று உள்ளார். காஷ்மீரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் ( காஷ்மீரில் இதுவரை 65,000 கொல்லப்பட்டும், 93,000 பேர் காணாமல் போயும், 15,000 பேர் பாலியல் வல்லுறவிற்கு உட்பட்டும் உள்ளனர் என மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. ) பற்றி கருத்து வெளியிட்ட திருவாளர் போல், " காஷ்மீர பிரதேசத்திற்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் " என்று குறிப்பிட்டார்.

இந்தியாவின் அளவு மற்றும் பொருளாதார தேவை இவற்றை கருத்தில் கொண்டு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்க அதிபர் கிளின்டன் கூட காஷ்மீர் விடயம் பற்றி இந்தியாவை புண்படுத்தாது மிக அவதானமாகவே கருத்து வெளியிட்டு இருந்தார். இங்கு இலண்டனிலும் எந்த அரசியல் வாதியும் காஷ்மீர் விடயம் பற்றி நேரடியாக கருத்து தெரிவிப்பதில்லை. அதனால் திருவாளர் போலின் கருத்து அங்கு மிகவும் செல்வாக்கு பெற்றது.

அயல் நாடான இலங்கையில் தமிழீழம் சுயநிர்ணய உரிமை பெறுவதையே அனுமதிக்காத இந்தியா; தனது நாட்டின் ஒரு பகுதிக்குள் சுயநிர்ணய உரிமை வழங்க முற்படுமா ? போலினுடைய இக்கருத்து இந்திய அரசியல் வட்டாரங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்றே கருதப்படுகிறது. மேலும் இவருடைய இக்கருத்து நியுகாமில் உள்ள இந்தியர்களின் வாக்கு வங்கியையும் பாதிக்கலாம் என நம்பப்படுகிறது.

பாகிஸ்தானிய பத்திரிகைகள் சிறுபான்மை சமூக, இலங்கை தமிழ் நகராட்சியாளர் என்ற அடைமொழி கொண்டே செய்தியை பிரசுரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியுகாம் மக்கள் பிரதிநிதி திருவாளர் போல் சத்தியநேசன் உடன் நேர்முகம்

மனித உரிமைவாதியும் அரசியல் வாதியும் ஆன திருவாளர் போல் சத்தியநேசன் அவர்கள் 21ம் நூற்றாண்டு தமிழ் இளைஞர்களிற்கு ஓர் முன் மாதிரி என்றால், அதில் தவறு இல்லை. பல இலட்சம் தமிழர்கள் ஈழத்தை விட்டு வந்தது போல், தஞ்சம் கோரி வந்தவர் தான் போல் அவர்கள். தனது கடுமையான உழைப்பாலும் திறமையாலும் தன்னையும் தான் சார்ந்த தமிழ் சமூகத்தையும் பெருமைப்பட வைத்து உள்ளார் என்றால் மிகையல்ல. நான் 1991ல் இலண்டன் வந்த போது இரண்டாவதாக சந்தித்த முதல் மனிதர் போல் (முதல் சந்தித்தது திரு புஸ்பகாந்தன் அவர்களை ). நாம் அறுவர் ஹீத்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட போது முன் அறிமுகம் இல்லாத போல் அவர்கள் எம்மை விடுதலை செய்விக்க அனைத்து முயற்சியும் எடுத்தார். அதன் பின் எட்டு ஆண்டுகளிற்கு பின் இந் நேர்காணலிற்காக அவரை நியுகாம் நகர சபையில் சந்தித்தேன்.



வணக்கம் திருவாளர் போல் சத்தியநேசன்! நீண்ட இடைவெளிக்கு பின் உங்களை ஓர் மக்கள் பிரதிநிதியாக சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி.

வணக்கம் திரு ஜெயபாலன்! நீங்கள் இலைமறை காயாக உள்ள பலரிற்கு களம் அமைத்து கொடுக்க வேண்டும். அதற்கு எனது ஆதரவு என்றும் உண்டு.

நன்றி போல். என்று பரஸ்பரம் அறிமுகம் செய்து வாழ்த்தி எமது பேட்டியை ஆரம்பித்தோம்.

உதயன்: உங்களை பற்றி எமது வாசகர்களிற்கு சற்று சொல்லுங்கள்:

போல்: யாழ் மாவட்டத்தில் உள்ள உரும்பராய் கிராமத்தை சேர்ந்தவன். எனது வீட்டில் நிம்மதியாக தூங்கி எழ சுதந்திரம் பறிக்கப்பட்டு அகதியாக தஞ்சம் கோரி 1984ல் பிரித்தானியாவிற்கு புலம் பெயர்ந்தேன். என்று எனக்கு எனது ஊரில் எனது வீட்டில் வாழும் சுதந்திரம் பறிக்கப்பட்டதோ அப்போதில் இருந்து நான் அகதி. எப்போதும் பாதிக்கப்பட்டவர்களிற்கு எம்மால் ஆன உதவிகளை செய்ய வேண்டியது எமது கடமை என கருதுபவன் நான். ஏனைய விடயங்களை பேட்டியில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

உதயன்: நீங்கள் எப்படி இப் பதவிக்கு வந்தீர்கள்? எப்படி அதில் உங்களிற்கு ஈடுபாடு ஏற்பட்டது என்பதை விளக்கி சொல்ல முடியுமா?

போல்: நான் 1986ல் இருந்தே தொழிற் கட்சி உறுப்பினராக இருந்தேன். அத்துடன் மனித உரிமைகள், மற்றும் அகதிகள் விடயங்களில் குரல் கொடுத்து வந்தேன். நானும் ஓர் தமிழ் அகதி என்பதால் இலங்கை தமிழ் அகதிகள் உட்பட அகதிகளிற்காக ஸ்தாபனரீதியாக போராட்டங்களை செய்தேன். மேலும் இதுவிடயமாக கருத்தரங்குகள் கூட்டங்களிற்கு சர்வதேச நாடுகளிற்கும் சென்று வந்தேன். பிற் காலத்தில் வெளியில் இருந்து குரல் எழுப்புவதிலும் பார்க்க அரசாங்கத்தில் பங்கேற்றால் கூடிய சேவைகளை எம் மக்களிற்கு வழங்க முடியும் என்ற நம்பிக்கையில் நகர சபை தேர்தலில் நின்றேன். மக்கள் ஆதரவால் வெற்றியும் பெற்றேன்.

உதயன்: இப் பதவியினுடைய பொறுப்புகள் என்ன என்று சற்று விளக்க முடியுமா?

போல்: நியுகாம் தொகுதியில் உள்ள 24 வட்டாரங்களில் ஈஸ்ற்ஹாம் வட்டாரத்தில் உள்ள 3 மக்கள் பிரதிநிதிகளில் நானும் ஒருவன். நியுகாம் உள்ளாட்சி மன்றத்தின் நிர்வாக பொறுப்புகள் 9 (மந்திரி) சபைகளிடம் உண்டு. அங்கு நிர்வாகத்துடன் இணைந்து மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் திட்டங்கள் வகுத்தல், செயற்படுத்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவோம். எப்போதும் இறுதி முடிவினை வழங்கும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மிடமே இருக்கும்.

உதயன்: குறிப்பாக உங்களுடைய செயற்பாடுகள் பற்றி சொல்ல இயலுமா?

போல்: சமூக அபிவிருத்தி, நிதி, உல்லாச துறை, விளையாட்டு ஆகியவற்றிற்கு பொறுப்பாக உள்ளேன். மேலும் சமூக இணக்க பிரிவு ( சிறுபான்மை இனத்தவரை பிரதிநிதித்துவம் செய்யும் ), கலாச்சார பிரிவு, சமூக மற்றும் கல்வி பிரிவு, ஈஸ்ற்ஹாம் சமூக பிரிவு ஆகியவற்றில் முக்கிய பொறுப்புகளில் உள்ளேன்.

உதயன்: நீங்கள் நகர சபைக்கு வந்த பிற்பாடு, தமிழ் சமூகத்திற்கு எந்த வகையில் நன்மை செய்து உள்ளீர்கள்? எதிர் காலத்தில் என்ன செய்ய உள்ளீர்கள்?

போல்: முதலில் நான் தமிழ் மக்கள் உட்பட ஏனைய மக்களையும் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டியவன் என்பதை நீங்களும் தமிழ் மக்களும் ஏற்று கொள்ள வேண்டும். நான் எப்போதுமே நான் சார்ந்து நிற்கும் தமிழ் சமூகத்திற்கு என்னால் முடிந்த வரை உதவ வேண்டும் என்று நினைப்பவன். இப்பொழுது TY2 Tamil Youth 2000 என்கிற விளையாட்டு கழகத்தையும், London Tamil Chamber of Commerce என்ற வர்த்தக கூட்டையும் ஆரம்பிக்க உதவி உள்ளேன். TY2 ற்கு ஓர் அலுவலகம் திறக்க திட்டமிட்டு உள்ளோம். ஐரோப்பிய தமிழர் விழாவை ஆண்டு தோறும் நடாத்தி வருகிறோம். நியுகாம் இளைய பாராளுமன்றத்திற்கு 2 தமிழ் உறுப்பினர்களை அனுப்பி வைக்க உதவி இருக்கின்றேன். மேலும் ஈஸ்ற்ஹாம் நிலக்கீழ் புகையிரத தரிப்பை அழகுபடுத்தி பூ செடிகள் வைத்து அதனை தமிழ் சமூகத்தின் பராமரிப்பில் விட உள்ளோம். இப்படியான சேவைகள் மூலம் எமது சமூகம் பிரித்தானிய சமூகத்துடன் பரஸ்பரம் இணைந்து வாழ்வதை காட்ட உள்ளோம். நகரும் கண்காட்சி கட்டமைப்புகள் செய்ய உள்ளோம்; அதில் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளை சித்தரித்து காட்ட ஏற்பாடு செய்து வருகிறேன். கொள்கை விடயங்களை பொறுத்த வரை, சிறுபான்மை சமூகங்களை பாதிக்கும் விடயங்களில் அவர்கள் உரிமைகளை மேம்படுத்த என்னால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்கிறேன். கிழக்கு இலண்டன் பல்கலைகழகத்துடன் இணைந்து குறுகிய கால வர்த்தக வகுப்புகளை ஒழுங்கு செய்ய உள்ளோம். இதன் மூலம் சொந்த வியாபாரம் மேற் கொள்ள விரும்புபவர்கள் மிகுந்த பயன் பெறலாம். அவர்கள் வியாபாரம் ஆரம்பிக்க உதவியும் செய்யப்படும்.

உதயன்: நீங்கள் தமிழ் மக்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

போல்: 10,000 - 15,000 தமிழ் மக்கள் உள்ள வட்டாரத்தில் 300 பேர்வரை மட்டுமே வாக்களிக்கிறார்கள். உள்ளாட்சி சபைகளில் இவர்கள் ஈடுபட வேண்டும். தமது

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிப்போர் தொடர்பாக பிரித்தானியாவில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்:

கொன்சவேடிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால், அரசியல் தஞ்சம் கோரி வருவோர் மென்மையாக கவனிக்கப்படமாட்டார்கள். அவர்கள் மாற்றி அமைக்கப்படும் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு; ஆறு வாரங்களிற்குள் அவர்களின் தஞ்ச விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு; விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் உடனடியாக திருப்பி அனுப்பப்படுவார்கள். பாதுகாப்பான நாடுகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அங்கிருந்து வருவோர் தஞ்சம் கோரும் உரிமையை இழப்பார்கள்.

**William Hauge - Conservative Party Leader**

தொழிற் கட்சி உலக நாடுகளிற்கு பிரித்தானியா தஞ்சம் தொடர்பாக மென் போக்குடைய நாடு என்று காட்டி உள்ளது. தஞ்சம் கோரி வருவோரை அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முடியும் வரை பிரித்தானிய தீவின் மண்ணில் கால் பதிக்க விடமுடியாது. அவர்களை தடுத்து வைக்க வேண்டும்.

**Ann Widdecombe - Shadow Home Secretary**

கொன்சவேடிவ் கட்சி தஞ்சம் சம்பந்தப்பட்ட விடயத்தை தனது அரசியல் நலனிற்கு பயன்படுத்துகிறது. ஆனால் நாங்கள் தஞ்சம் சம்பந்தப்பட்ட விடயத்திற்கு அவதானமாக தீர்வை தேடுகிறோம். இந்த தஞ்ச விடயம் சம்பந்தமாக நாம் எல்லோரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மாறாக இவ்விடயத்தை தூண்டவோ அதனை நமது நலனிற்கு பயன்படுத்தவோ கூடாது.

**Tony Blaire - Primenister**

நாங்கள் இப்போது, ஐரோப்பா முழுவதும் இன்று மிக மிக சிக்கலாக உள்ள விடயத்தை, எங்களால் முடிந்த அளவு வேகமாகவும் விரைவாகவும் கையாள்கிறோம். கொன்சவேடிவ் கட்சி மக்களுடைய குழப்பத்தை தங்களுக்கு சாதகமாக்கி தஞ்சம் சம்பந்தப்பட்ட விடயத்தை தமது நலனிற்கு சாதகமாக பயன்படுத்த முனைகிறது.

**Jack Straw - Home Secretary**

கொன்சவேடிவ் ஓர் தீவிர இனவாத வலது சாரி கட்சி. வில்லியம் ஹெக்கினால் வெளியிடப்பட்ட தடுப்பு மையம் ' Noccentration Camp ' கருத்தாக்கத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கிறது.

**Marsha Singh - The Bradford West Labour MP**

மூன்று கட்சிகளும், குடிவரவு தஞ்ச நடைமுறை விடயங்களை சமூக இன உறவுகளை பாதிக்கும் வகையில் பயன்படுத்துவது இல்லை, என்ற உடன்பாட்டில் கையெழுத்து இட்டு உள்ளன. தொழிற் கட்சியும் கொன்சவேடிவ் கட்சியும் பயன்படுத்தும் மொழிகள் இனவெறுப்பை வெளிப்படுத்துகின்றன.

**Simon Hughes - Liberal Democrat Spokesman**

தடைக்கு மேல் தடை இட்டு பிரித்தானியாவிற்குள் வருவோரை கட்டுப்படுத்தி, உள்துறை அமைச்சு இனவாதிகளிற்கு வாழ்வு கொடுத்து வருகிறது. அரசாங்கத்தின் இதய பகுதிகளிலேயே நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதம் காணப்படுகிறது.

**Bill Mirris - General Secretary of Transport and General Workers Union**


தஞ்ச விடயத்தை வாக்குகளை பெறுவதற்காக பிரதான கட்சிகள் பயன்படுத்துவது அபாயமான விளைவுகளிற்கே இட்டு செல்லும். இது விரைவிலோ அல்லது தாமதமாகவோ யாராவது இனவாத கோஷத்தை தூக்கிக் கொண்டு வந்து நிற்பதற்கே வழிவகுக்கும்.

**Nick Hardwick - Chief Executive of the Refugee Council**

அனைத்து கட்சி தலைவர்களும் அரசியல் தஞ்சம் கோருவோர், குடிவரவு, இன உறவு விடயங்களில் பயன்படுத்தும் மொழியில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

**Hugh Harris - Acting Chairman of Commission for Racial Equality**


ESTABLISHED SINCE 1966



JUST ONE PHONE CALL & YOU CAN FORGET ALL YOUR SHIPPING PROBLEMS

WITH 34 YEARS OF EXPERIENCE PERMA INTERNATIONAL CAN TAKE CARE OF

EVERYTHING




EXPERIENCE IS THE MOST IMPORTANT INGREDIENT OF ALL - THAT'S WHAT PUTS PERMA INTERNATIONAL A FEW NAUTICAL MILES AHEAD OF THE REST

NEW ADDRESS
14 SAPCOTE BUSINESS CENTRE
DUDDEN HILL LANE
LONDON NW10 2DH

FOR YOUR CONVENIENCE
YOU CAN STILL USE OUR OLD OFFICE WHICH IS SITUATED AT
13 BURNLEY ROAD, LONDON NW10 1ED
TEL: 020 208 2431, FAX: - 020 8208 1882

எங்களுடைய 34 வருட அனுபவத்தால் உங்களுடைய எல்லா தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

PERMA INTERNATIONAL


Tel: 020 8459 6633 (6 lines) FAX: 020 8459 6455

E-mail:- perma.international@btinternet.com

# அகதிகள் அவலம்

(25 மார்ச், இலண்டன்) கடந்த ஆண்டு அகதிகள் எண்ணிக்கை அதிகரித்ததை தொடர்ந்து, ஜேர்மனிக்கு அடுத்த படியாக அகதிகளை அதிக அளவு ஏற்கும் நாடாக பிரித்தானியா உள்ளது. இது பிரித்தானிய தேசிய சிறு பத்திரிகைகளிலும் வலதுசாரி கொன்சவேடிவ் சார்பு பத்திரிகைகளிலும் இப்போது பாரிய முக்கியத்துவமான செய்தியாக உள்ளது. அப்கானிஸ்தான் விமான கடத்தல் அகதி கோரிக்கையில் முடிந்தது; அப் பத்திரிகைகளிற்கு 'அவல் கிடைத்தது மாதிரி' அமைந்து விட்டது. மிக அதிக அளவில் விற்பனையாகும் சிறு பத்திரிகைகள் இப்போது அகதிகளிற்கு எதிராக 'வரிந்து கட்டி கொண்டு உள்ளன'.




அகதிகள் தொடர்பான மோசமான பிரச்சாரங்கள் தூண்டிவிடப்படுவதாகவும் அகதிகள் தமது நாடுகளில் இருந்து பல்வேறு விதங்களில் துன்புறுத்தப்பட்டு இங்கு வந்து உள்ளார்கள்; அவர்களிற்கு மானிதாபிமானம் காட்டப்பட வேண்டும் என்பதை பத்திரிகைகள் ...விப்பதற்கு மாறாக அவர்களை வேண்டதகாதவர்களாக அடையாளப்படுத்தி வருவதாகவும் தமிழர் தகவல் நடுவத்தால் நியுகாமில் இடம்பெற்ற அகதிகள் பற்றிய கருத்து அரங்கில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

மிக சிறுபான்மையான போலிகள் மேற் கொள்ளும் மோசடிகள், களவுகள், மற்றும் குற்ற செயல்களை மொத்த அகதிகள் சமூகத்தின் மீதும் சுமத்தி, தமது வெறுப்பை நியாயப்படுத்த முற்படுகின்றன. மேலும் அகதிகளிற்கு இன்ன இன்னவற்றிற்கு இவ்வளவு செலவு என பட்டியல் போட்டு, வரி செலுத்துவோரை தவறான சிந்தனைக்கு திசை திருப்புகின்றன. மேலும் மோசடிக்காரரை அம்பலப்படுத்துவது என்ற பெயரில் போலி அகதிகளை இனம் கண்டு அவர்களை மொத்த அகதிகள் சமூகத்துடன் இணைத்து விடுகின்றன. இப்படியான செயல்கள் பல்கலாச்சார சூழலை நோக்கி செல்லும் பிரித்தானிய சமூகத்தில் பிளவுகளையும் நம்பிக்கை இன்மையையுமே ஏற்படுத்தும்.

மேலும் அகதிகளின் உதவி நலன்கள் மிக கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. அவர்களுடைய செலவிற்கு வழங்கப்படும் உணவு முத்திரைகளை பயன்படுத்தி பொருட்கள் வாங்கும் போது மிகுதி பணத்தை வர்த்தக நிலையங்கள் தாமே வைத்து கொள்ளலாம் என புதிய நடைமுறை தெரிவிக்கிறது. அதாவது £10 முத்திரையில் £9.25ற்கு பொருள் வாங்கினால் மிகுதி 0.75p ஐ பெற முடியாது. அது அவ் வர்த்தக நிறுவனத்திற்கே போய் சேரும்.

# சத்தியநேசன்...

கருத்துக்களையும் குறைகளையும் முன் வந்து தெரிவிக்க வேண்டும்.

என்னிடம் மட்டுமல்ல, அவரவர் வட்டாரங்களில் உள்ள பிரதிநிதிகளிடம் தம் எண்ணங்களை தெரியப்படுத்த வேண்டும். முன் வந்து சமூக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும் தம் இடையே உள்ள போட்டி, பொறாமைகள், தனிப்பட்ட பழிவாங்கல்கள் இவற்றை விட்டுவிட்டு எனது சமூகம் என்ற பொது நோக்கில் செயற்பட வேண்டும். சிறுபான்மை இனமான தமிழர்கள் இங்கு அமைப்பு வடிவில் இயங்கினால் மட்டுமே ...களால் தம்மை தக்க ...த்து கொள்ள முடியும். இப்போதே தமிழ் மக்கள் சமுதாய நோக்கில் அமைப்பு வடிவம் பெற்று உறுதியான சமூகமாக வேண்டும். மேலும் இலண்டனில் உள்ள 33 நகராட்சி தொகுதிகளிலும் தமிழ் மக்கள் போட்டி இட வேண்டும் என்பது எனது ஆவல்.



உதயன்: மனோபார்க்கில் இயங்கும் தமிழர் தகவல் நடுவம் ஓர் சுயாதீன அமைப்பு. அங்கு அவர்களிற்கு உள்ள நிதிபிரச்சனை காரணமாக தமிழ் மக்களின் வெளியீடுகள் வெளியிடப்படாது, சிறந்த படைப்புக்கள் தூசி படிகின்றன. இப்படியான படைப்புகள் வெளிவர, உள்ளாட்சி மன்றம் தமிழர் தகவல் நடுவத்துடன் இணைந்து ஏதும் முன் முயற்சிகள் எடுக்க முடியுமா?

போல்: இதற்கு முதலில் தமிழர் தகவல் நடுவம், தொடர்ச்சியாக வெளியீடுகளை செய்து முயற்சி உடன் இயங்கினால் உள் ஆட்சி சபைகள் மூலம் உதவிகள் எடுக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் தமிழர் தகவல் நடுவம் சிலரால் மட்டும் பயன்படுத்தப்படும் தகவல் களஞ்சியமாக உள்ளதால் இப்போது எதனையும் எதிர்பார்க்க முடியாது.

உதயன்: இப்போது நான் கேட்க போவது மிக மிக முக்கியமான ஓர் விடயம். இன்று சர்வதேச அளவில் தாய் மொழி கல்வி தான் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு மிக முக்கியம் என்று சொல்லப்படுகிறது. நோர்வேயில் பெற்றோரை, ஐந்து அல்லது ஆறு வயது வரை தம் குழந்தைகளிற்கு தாய் மொழி கல்வியை கற்பிக்கும் படி ஊக்கபப்படுத்துகின்றனர். ஆனால் துரதிஸ்டவசமாக இங்கு இந்த நிலை இல்லை. இங்கு பாடசாலைகளில் இரண்டாவது மொழியாக ஐரோப்பிய மொழிகளை கற்பிப்பதற்கு பதிலாக, தமிழ் மொழியை தமிழ் மாணவர்களிற்கு கற்பிக்க கூடிய நிலையை உருவாக்க நீங்கள் முயற்சிக்க வேண்டும் (ஒவ்வோர் வகுப்பிற்குமான, தமிழ் மொழி பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, தமிழ் மொழி பரீட்சை சபை உருவாக்கப்பட்டு, ஆரம்ப பள்ளியில் இருந்து அரச அங்கீகாரம் பெற்ற மொழியாக கற்பிக்கப்பட வேண்டும்.) என்று உசயனின் சென்ற இதழில் கோரி இருந்தோமே அதற்கு நீங்கள் என்ன பதில் தர போகிறீர்கள்?

ASIAN FUNERAL CARE LTD

Phone 020 8909 3030 Fax 020 8907 6050
Mobile 0797 0934623

35 KENTON PARK PARADE,
KENTON ROAD,
KENTON, HARROW, MIDDX. HA3 8DN

INDEPENDENT ASIAN OWNED FUNERAL DIRECTORS
SERVING ALL ASIAN COMMUNITIES THROUGHOUT LONDON

- ★ A PERSONAL TAILORED SERVICE TO MEET EVERY INDIVIDUAL RELIGIOUS AND CULTURAL NEEDS
- ★ WASHING AND DRESSING FACILITY
- ★ PRIVATE VIEWING AND SERVICE HALLS
- ★ 24 HOUR SERVICE
- ★ DISPERSEMENT OF ASHES ABROAD
- ★ COACH HIRE
- ★ FLORAL TRIBUTES
- ★ D.S.S CLAIMANTS WELCOME
- ★ INTERNATIONAL TRANSPORTATION SPECIALISTS
- ★ SATURDAY & SUNDAY FUNERALS ARRANGED
- ★ NEW PURPOSE BUILT PREMISES

உங்கள் சொந்த கலாச்சார முறைக்கு தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்படும்

CONTACT SANJAY LODHIA ON 020 8909 3030

# மிலேனியத்தில் அதிசய அர்ச்சகர்கள்

## அர்ச்சகர்களின் அட்டகாசங்கள் உள்ளது உள்ளபடி

*** கோழி அறுத்தால் தான் குறை தீர்க்க முடியும் - சூனியக்கார தலைமை அர்ச்சகர்!**

*** அடுத்தவன் மனைவியை அபகரித்த அர்ச்சகர் - நானே மனைவி இல்லாமல் தவிக்கும் போது அர்ச்சனை செய்ய முடியுமா? - காய்ந்து கிடக்கும் அர்ச்சகர்!**

*** 6 மணித்தியாலத்திற்கு £300 கேட்கும் - அலைச்சல் கொண்ட அர்ச்சகர்!**

*** ஆலயத்திற்குள் நுழைந்து விட்டால் தாங்கள் தான் எல்லாம் - தலை கனத்த அர்ச்சகர்!**

*** ஆலயத்தில் குங்குமம் கொடுக்கும் போது பெண்ணின் கையை திருகிய - திருட்டு அர்ச்சகர்!**

*** பிள்ளை கிடைக்குமா என்று ஜோதிடம் கேட்கச் சென்ற பெண்ணிடம் அவனை(கணவனை) நம்பாதே பிள்ளைகளை நான் தருகிறேன் என்று கூறும் - அசிங்கம் பிடித்த அர்ச்சகர்!**

*** தனது வேலைக்காக அடுத்தவனை குறை கூறும் - கிறுக்குப் பிடித்த அர்ச்சகர்!**

*** யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன பணம் வந்தால் சரி என்று நினைக்கும் - கஞ்சத் தனமான அர்ச்சகர்!**

**இப்படிப்பட்ட அதிசய, பட்டை தீட்டி கொட்டை கட்டி உண்மையான பிராமண குலத்திற்கே களங்கம் விளைவிக்கின்ற அர்ச்சகர்களை படங்களுடனும் நடந்துள்ள சம்பவங்களை தக்க ஆதாரங்களுடனும் வெளி வரஉள்ளது.**

## வாசிக்கத் தவறாதீர்கள்.....

பொதுவாகவே மக்கள் அர்ச்சகர்களின் மீது மரியாதை வைத்து ஐயா என்னும் உயர்ந்த ஒரு வார்த்தையினை பயன்படுத்தி வருகின்றனர். இப்படி இருக்கையில் ஆலயங்களில் வேலைக்கு அமர்த்தப்படுகின்ற இவர்கள் தெய்வத்தின் பிம்பத்தை ஒரு தெய்வமாக நிச்சயமாக கருதுவதில்லை. பழக பழக பாலும் புலிக்கும் என்பார்கள். இவர்கள் பழகிவிட்ட படியினால் பயமும் நீங்கி, பக்தியும் நீங்கி சிலைகளிற்கு தீப, துபம் காட்டுவது, அலங்கரிப்பது என்பது மக்களுக்காகவும் ஆலய நிர்வாகத்தினர்க்காகவும் தான். இந்த செய்தியினை எமது பத்திரிகைக்கு, ஆலயத்திற்கு சென்ற மக்கள் தக்க ஆதாரங்களுடன் அனுப்பி உள்ளார்கள். இது எமது புதிய சமய அரங்கு பகுதியில் தொடர்ந்து பிரசுரமாகும்.

---

போல்: நிச்சயமாக அடுத்த கூட்ட தொடரில் இது பற்றி பேசுவேன். ஆனால் உடனடியாக எந்த உறுதி மொழியையும் தர முடியாது.

உதயன்: இலங்கை தமிழரின் எதிர் காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

போல்: எமது மக்கள் செய்த அளப் பெரிய தியாகங்களிற்கு, அவர்கள் சமாதானமாகவும் நிம்மதியாகவும் வாழ சுயநிர்ணய உரிமை உள்ள தேசம் வேண்டும். இது எதிர் காலத்தில் விரைவில் கிடைக்க வேண்டும்.



உதயன்: இந்த யுத்தத்தை நிறுத்த பிரித்தானிய அரசும் சர்வதேச சமூகமும் என்ன செய்ய முடியும் என நினைக்கிறீர்கள்?

போல்: மேற்குலக நாடுகள் தமது சுயலாபத்திற்காக இன பிரச்சனையை கையாளாமல், இதனை எப்படியும் சமாதான முறையில் தீர்க்க யுத்தத்தில் ஈடுபட்டு உள்ள இரு தரப்பையும் ஒப்பு கொள்ள வைக்க வேண்டும். மேலும் தமிழ் மக்கள் மீது எந்த தீர்வையும் திணிக்க முயலக் கூடாது. பிரித்தானியாவின் முன்னைய காலனி நாடு என்ற படியால் இலங்கை இன பிரச்சனையை தீர்க்க வேண்டிய பொறுப்பு பிரித்தானியாவிற்கும் உண்டு.

உதயன்: இலங்கை இன பிரச்சனையில் தலையீடு செய்யும் படி பிரித்தானிய அரசை உங்களால் வற்புறுத்த முடியாதா?

போல்: தனி மனிதனாக இல்லாமல் அமைப்பு வடிவில் செயற்பட்டால் அதற்கு என்னால் ஆன அனைத்தையும் செய்ய முடியும். இலங்கைக்கான ஓர் அமைப்பை 'Srilanka Forum' உருவாக்க வேண்டும். அதற்கு எல்லா கட்சிகளிலும் உள்ள ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரசசார்பற்ற நிறுவனங்களையும் அதில் இணைத்து கொள்ள வேண்டும். இவ் அமைப்பு மூலம் இலங்கையில் உள்ள பிரச்சனையை

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

HAPPY TEXT

அதி நவீன வேலைப்பாடுடன் கண்ணை கவரும் 22காரட்

சிங்கப்பூர் தங்க நகைகள். தாலிக்கொடி சங்கிலி கைச்சங்கிலி

வளையல்கள் மோதிரங்கள். பஞ்சாயுதம் முத்துச்சங்கிலிகள் இன்னும் பல

யாவும் மலிவு விலையில்.

இந்தியாவில் தருவிக்கப்பட்ட றியல் காஞ்சிபுரம் பனாறிஸ் பஞ்சாபி சூட்டுகள் சிறிலங்காவில் இருந்து ப.சாரங்கள் ப.கவுன் பிறசியர்கள் சிங்கப்பூர் றெடிமேட் ஆடை வகைகள் மற்றும் Rice cooker Ana - Digital பிரேசர் மணிக்கூடுகள் கொளோன் வகைகள் இன்னும் பல.

வாருங்கள் வந்து பாருங்கள்!

திங்கள் தவிர்ந்த ஏனையநாட்கள் மத்தியானம் 12 தொடக்கம் 7.30 மணிவரை திறந்திருக்கும்.

பழைய நகைகளை கொடுத்து புது நகைகளை பெற்றுக் கொள்ளலாம்.

165 UPPER TOOTING ROAD,
TOOTING SW TDJ,
LONDON
TEL: 0181 6823958

3 CLAYTON AVE ALBERTON,
WEMBLEY 4AO 4JY,
LONDON
TEL: 0181 9030 782
FAX: 0181 903 5119

# இலங்கை செய்தி சுருக்கம்

**ஆயுதத்திற்கு உதவி மறுப்பு** : பிரித்தானிய அரசு ஆயுத கொள்வனவிற்கு இலங்கைக்கு வழங்கி வந்த உதவியை விலக்கி உள்ளது. இலங்கை உட்பட 63 நாடுகளிற்கு இந்த உதவி விலக்கப்பட்டு உள்ளது. தொழிற் கட்சி அறிமுகப்படுத்திய உணர்வு பூர்வமான வெளிநாட்டு கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுகள் கடந்த பின் இவ் உதவி விலக்கப்பட்டு இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் அமெரிக்கா யுத்த தளபாடங்களை (mortar-locating devices, helecopters & high calibre ammunition) இலங்கைக்கு விற்க ஜனவரியில் உடன்பட்டு உள்ளது.

**ஆணையிறவு** : தமிழ் புத்தாண்டிற்கு முன் தினம், ஆணையிறவு மோதலில் இரு வாரங்களாக இடையில் மாட்டுப்பட்ட 2000 பேரையும், பிரச்சனைக்கு உள்ளான பகுதிகளில் இருந்து வெளியேற அனுமதிக்கும் படி கோரி; மனித உரிமை அமைப்புகள் ஓர் நாள் பகிஸ்கரிப்பிற்கு அழைப்புவிடுத்தன. தாம் யாரையும் தடுத்து வைக்கவில்லை என்று கூறும் இராணுவம், சண்டை காரணமாக சோதணைகளில் தாமதம் ஏற்பட்டு உள்ளதாக கூறுகிறது. மேலும் ஆணையிறவில் புலிகள் அடைந்த இராணுவ வெற்றி அரசியல் வெற்றியாக மாற்றப்பட வேண்டும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

**அன்பளிப்பு** : 9 தடவைகள் பிரித்தானிய விருது பெற்ற பொப் பாடகர் ரொபி வில்லியம் £2 மில்லியனை சமூகநலன் அமைப்புகளிற்கு வழங்க இருக்கிறார். இவரது இந்த அறிவிப்பு இவர் இலங்கையில் உள்ள அனாதைகள் இல்லத்திற்கு சென்றிருந்த போது வெளியிடப்பட்டது. இவ் அறிவிப்பை வழங்கி " என்னிடம் நிறைய உண்டு இனி நான் அவற்றை மற்றயவர்களிற்கு வழங்க ஆரம்பிக்கிறேன்," என்று தெரிவித்தார். இது பற்றிய முழு விபரம் மே 27ல் இணைய வலையில் வெளியிடப்படும்.

## சத்தியநேசன்...

பிரச்சாரப்படுத்தி அழுத்தங்களை கொடுக்கலாம். இதன் உருவாக்கத்தில் தமிழர் தகவல் நடுவம், பிரித்தானிய அகதிகள் அமைப்பின் இலங்கை திட்ட பிரிவு ஆகியன 'Srilanka Forum' யை உருவாக்க முன் முயற்சி எடுக்க வேண்டும். இந்த யுத்தத்தில் ஈடுபட்டு உள்ள தரப்பினருடனும் இவ் அமைப்பு தொடர்புகளை பேணி கொள்வது அவசியம்.

உதயன்: யுத்தத்தில் ஈடுபட்டு உள்ள தரப்பினரிற்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

போல்: போதும் இது போதும். யுத்தத்தை நிறுத்திவிட்டு சிந்தியுங்கள். இரு பகுதியும் வன்முறையை கைவிட்டு ஜனநாயக வழியில் செயற்பட வேண்டும். போராட்ட முறையில் மாற்றம் தேவை. இளைய சமுதாயத்தின் இழப்புகள் மதிக்கப்பட வேண்டும். இப்படியே யுத்தம் செய்து கொண்டு இருந்தால் இலங்கை தமிழ் மக்களுடைய எதிர் காலம் என்ன? அம் மக்கள் சுதந்திரமாகவும்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)


Genga & Co.

SOLICITORS

*Administor of Oaths*

SPECIALISTS IN :

ASYLUM + IMMIGRATION LAW

CRIMINAL LAW

- POLICE STATION
MAGISTRATE COURT
CROWN COURT

தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுநர்கள்
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு வழக்குகள்"
குற்றவியல் வழக்குகள்
"மஜிஸ்டுரட் நீதிதன்றம்"
"உயர் குற்றவியல் நீதிமன்றம்
பொலீஸ் நிலையம்"
எந்தவிதமான அவசரத்தேவைக்கும்
24 மணித்தியால தொடர்பு இலக்கம்

0956 569 559

Tel: 0208 795 5020

Fax: 0208 795 5030

Genga & Co.
1st Floor, 5 Lancelot Road, Wembley, Middx. HA0 2AJ
DX: 80210 Wembley Central
* E-mail: genga8co.wembley.ic24.net

THE LONDON CLUB

546 LONDON ROAD, ISLEWORTH, MIDDX. TW7 4EP

PHONE: 020 8847 4577

NEWLY OPENED BAR/RESTAURANT
IN FRIENDLY ATMOSPHERE

இது ஓர் தமிழ் நிறுவனம்

OPENING TIME
MON - SAT 12PM to 11PM
SUNDAY 12PM to 10.30PM

TANDOORI RESTAURANT
(5PM TO 10.30PM)
TUESDAY KITCHEN CLOSED

WEMBLEY GREETING CARDS LIMITED
(CASH & CARRY)

WGC

WHOLESALERS OF GREETING CARDS, STATIONERY & TOYS

உங்களின் பிறந்த தினமா. திருமண நாளா. மற்றும் ஏனைய வைபவங்களுக்கும் தேவையான அனைத்துப் பொருட்களுக்கும். மலிவாக. தரமாகப் பெற்றிட ஒரேயிடம்.:

*Plastic cutlery, Plates, Bowls, Spoons, also party/weddings decoration*
Open from Monday to Friday - 10a.m to 8p.m   Saturday Closed   Sunday - 10 a.m to2 p.m

WEMBLEY STADIUM INDUSTRIAL ESTATE
FIRST WAY WEMBLEY MIDDLESEX HA9 0TU

Tel: 0181 903 8990
Fax:0181 903 5812




# பிரித்தானிய அரசு எச்சரிக்கை உல்லாச பயணிகள் வரவு அதிகரிப்பு



இலங்கைக்கு கடந்த ஆண்டு அதிகப்படியான உல்லாச பயணிகள் வந்து சென்று உள்ளனர். 1999ம் ஆண்டே அதிக அளவு உல்லாச பயணிகள் சென்று இதுவரை கண்டிராத உச்சத்தை எட்டி உள்ளது. கடந்த ஆண்டு 435,000 உல்லாச பயணிகள் இலங்கைக்கு சென்று உள்ளனர். இவர்களில் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து 31.4% ஆனோர் பயணித்து உள்ளனர். இந்நாடுகளில் இந்தியாவிலும், ஜப்பானிலும் இருந்து அதிக அளவு உல்லாச பயணிகள் சென்று உள்ளனர். மிக அதிக அளவான 63.2% உல்லாச பயணிகள் மேற்கு ஐரோப்பாவில் இருந்து சென்றுள்ளனர். இவர்களில் பிரித்தானியரும் ஜேர்மனியரும் முக்கிய உல்லாச பயணிகளாக உள்ளனர்.

பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு அண்மையில் வெளியிட்ட அறிவிப்பில் இலங்கைக்கு செல்லும் உல்லாச பயணிகளை எச்சரித்து உள்ளனர். இலங்கை நீர் வலயங்கள் அபத்தானவை என்றும் கொள்ளை சம்பவங்கள் இடம்பெறலாம் என்றும் உல்லாச பயணிகள் எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.

இலங்கையில் கடந்த 17 ஆண்டுகளாக உக்கிரமான உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற போதும் தமிழீழ விடுதலை போராளிகள் எச்சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டு பயணிகளை குறிவைத்து தாக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எண்பதுக்களின் நடுப்பகுதியில் கடத்தி செல்லப்பட்ட அமெரிக்க அலன் தம்பதிகள் பின்னர் அப்போதைய இந்திய பிரதமர் இந்திராகாந்தியின் வேண்டுகோளிற்கு இணங்க விடுவிக்கப்பட்டனர். விடுதலையின் போது தாம் மிகவும் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட்டதாக அத் தம்பதிகள் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இலங்கைக்கு அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் முக்கிய பொருளாதார வளம் உல்லாச பயணத்துறை. இப் பொருளாதார வளங்களை கொண்டே இலங்கை அரசு தமிழ் மக்களிற்கு எதிரான யுத்தத்தை நடாத்தி வருவதாகவும் இலங்கைக்கு பயணம் செய்யும் உல்லாச பயணிகள் தமது கரங்களில் இரத்த கறையை பூசி கொள்கிறார்கள் என்றும் தமிழீழ விடுதலையை ஆதரிக்கும், பெயர் குறிப்பிட விரும்பாத அரசியல் விமர்சகர் கருத்து தெரிவித்து உள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் யுத்தம் தொடருமேயானால், உல்லாச பயண முகவர் நிறுவனங்கள் ஊடாக உல்லாச பயணிகள் இலங்கைக்கு செல்வதை தடுக்க, போராட்டங்கள் மேற் கொள்ளப்படலாம் என்றும் தெரிவித்தார்.

# 800 நோயாளர்கள் சிகிச்சை இன்றி வீடு திரும்பினர்

மல்லாவி மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு வந்த 800 நோயாளர்கள், மருத்துவ வசதிகள் இன்மையால் கடந்த மாதம் சிகிச்சை அளிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதாக இலங்கையில் இயங்கும் 'எல்லைகள் அற்ற மருத்துவர்கள்' ( Medecins Sans Frontieres - MSF ) அமைப்பு தெரிவித்து உள்ளது. கடந்த ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற இவ்வமைப்பு, 1986ல் இருந்து இலங்கையில் தனது சேவையை வழங்கி வருகிறது. திருப்பி அனுப்பப்பட்ட நோயாளிகள் நீரிழிவு, அஸ்த்மா, இதய மற்றும் நரம்பு சம்பந்தமான பாரிய நோய்களால் பாதிக்கப்பட்டு இருந்ததாகவும் அச்செய்தி தெரிவிக்கிறது. மல்லாவிக்கு இரு தடவைகள் மருந்து பொருட்களை அனுப்ப எடுத்த முயற்சிகள் இராணுவ தலையீட்டால் இடை நிறுத்தப்பட்டது.

அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட யுத்தநிலையை காரணம் காட்டி வடபகுதிக்கான மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் விநியோகிக்க இராணுவம் தடை விதித்து உள்ளது. பரசிட்டமோல் போன்ற வலி நிவாரணிகளையும் நோய் எதிர்ப்பு மாத்திரைகளையும் கூட பெறமுடியாத நிலை வடபகுதியில் நிலவுகிறது. இராணுவத்தின் இந்த மருத்துவ பொருட்கள் மீதான தடையால் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டு உள்ளன.

வடபகுதியின் மருத்துவ நிலைபற்றி குறிப்பிட்ட 'எல்லைகள் அற்ற மருத்துவர்கள்' அமைப்பின் இலங்கை பிரிவின் தலைவர் இசாபல் சிம்சன், "சிகிச்சை நிலையங்களையும் மருத்துவ மனைகளையும் மூடிவிட வேண்டும்; அல்லது நோயாளர்களை சேர்த்து கொள்ளாமல் இருக்க வேண்டும் ", என குறிப்பிட்டார். இவர் இலங்கை அரசிற்கும் பாதுகாப்பு அமைச்சிற்கும் விடுத்த அவசர வேண்டுகோளில், உடனடியாக மருந்துகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கும் படி கேட்டு கொண்டார்.

'எல்லைகள் அற்ற மருத்துவர்கள்' அமைப்பு இலங்கையில் 46 வெளிநாட்டு மருத்துவர்களையும் 140 இலங்கை மருத்துவ துறைசார்ந்தோரையும் கொண்டு இயங்குகிறது. மகப்பேற்று மற்றும் தாய் சேய் மருத்துவம், சத்திர சிகிச்சைகள், நடமாடும் மருத்துவ சேவைகள் என்பனவற்றில் இவ்வமைப்பு ஈடுபட்டு உள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையிலும் பருத்தித்துறை, வவுனியா, முருங்கன், மல்லாவி, புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு வைத்தியசாலைகளிலும் வெவ்வேறு மருத்துவ குழுக்களை கொண்டு சேவைகளை வழங்குகின்றன. கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் கிராமங்களிற்கான நடமாடும் சிகிச்சை நிலையங்களை நடாத்தி வருகின்றன.


Part-Time Journalists Wanted
Good standard of English essential
Apply to:
Asian Chronicle GEMINI HOUSE 25-27 High Street Edgware, Middx HA8 7EE

Part-Time
நிருபர்கள், செய்தியாளர்கள் தேவை
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
உதயன் GEMINI HOUSE
25-27 High Street Edgware, Middx HA8 7EE

படித்த சுறுசுறுப்பான
Representatives
பத்திரிக்கைகு விளம்பரங்கள் சேகரிக்க தேவை. அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
உதயன் GEMINI HOUSE 25-27 High Street Edgware, Middx HA8 7EE

INDIAN RESTAURANT FOR SALE
30 SEATS
EALING HANGER LANE
15 YEARS LEASE (Renewable)
RENT - £12,000
Rate - £1,500
Contact Name - IQBAL
Tel: 0181 991 2125 / 2122 ans.machine

## சமாதானமே தீர்வு

"......... we chose to talk before our country's infrastructure was destroyed and before more innocect civilians were slaughtered. ........ we are reinforced in our conviction that whatever the depth of the problem, it can be resolved through talking. Indeed the obstacles that still stand in the way of resolution of any of these conflicts define precisely the actions that are required and that are possible. This might be the involvement of all contending parties; or the readiness of leaders and supporters to shift from entrenched positions because they recognise the important of peasce ........." என்று, டப்ளின் ரிறினிரி பல்கலைக்கழக கல்லூரியில் இடம்பெற்ற 7வது வருடாந்த சுதந்திர விரிவுரையின் போது தற்போதைய தென் ஆபிரிக்காவின் தந்தை நெல்சன் மண்டேலா குறிப்பிட்டார்.

ஈழத் தமிழர்கள் தம்மை தற்காத்து கொள்ள தாயக மண்ணை கைவிட்டு உலகெங்கும் பரவி வாழ்கிறார்கள். தாயகத்தை விட்டு வெளியேறியவர்கள் எப்படி அமைதியாகவும் பாதுகாப்புடனும் வாழ்கிறார்களோ, அப்படி தாயகத்தில் உள்ளவர்களும் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமையை கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இலங்கையில் வாழும் ஏனைய இனங்களும் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு அங்குள்ள இனப் பிரச்சனைக்கு சமாதானமான தீர்வு காணப்படுவது இன்றியமையாதது. ஈழத் தமிழ் மக்களின் பிரச்சனை இன்று நேற்று உருவானது அல்ல; இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் உள்ள பிரச்சனை. கடந்த கால் நூற்றாண்டாக ஈழத் தமிழ் மக்களின் உயிர் வாழ்தலுக்கான அடிப்படை உரிமையையே மறுக்கின்ற பிரச்சனையாக உள்ளது. இப்போது 25 வயதுடைய ஈழத்து இளைஞர் யுவதிகளிற்கு அமைதியான வாழ்வு எப்படி இருக்கும், என்பது அவர்களுடைய கற்பனைக்கு அப்பாற்பட்ட விடயமாக உள்ளது. ஓர் தடவை தான் இறக்கிறோம் என்று கூறி சமாதானப்பட்டு கொள்பவர்கள், ஓர் தடவை தான் வாழவும் முடியும், என்பதையும் ஏற்று கொள்ள வேண்டும். அந்த ஓர் தடவை வாழும் போதும் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வது மிக அவசியமானது.

## உதயனின் கோணம்

இந்த நூற்றாண்டு சமாதானத்திற்கும் மனித உரிமைகளிற்குமான நூற்றாண்டாக கொள்ளப்படுகிறது. சமாதானமே பிரச்சனைகளிற்கு அதி சிறந்த ஆயுதமாக உள்ளது. வன்முறை என்றும் இல்லாதவாறு மிகுந்த கீழ்நிலையை அடைந்து உள்ளது. யுத்தத்திற்கான ஆண்டு என்பதும் சமாதானத்திற்கான யுத்தம் என்பதும் காலாவதியான பிரச்சாரங்கள் ஆகிவிட்டது. மரண முரண்பாடுகள் அனைத்தும் மக்களையே குறிவைக்கின்றன என குறிப்பிடும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் ஹொவி அனன் அவர்கள் கடந்த நூற்றாண்டில் சர்வதேச இயக்கம், பிளவுபட்டும் கடுமையான அரசியல் கணிப்புகளை அடிப்படையாக கொண்டும் இருந்தது. இந்த நூற்றாண்டில் எங்களால் சிறந்த முறையில் இயங்க முடியும்; கட்டாயம் இயங்குவோம் என்றும் குறிப்பிட்டார். 'சர்வதேச சமூகம்' என்பதற்கு மிக உறுதியான விளக்கத்தை அளிப்பதற்கு இதுவே சிறந்த நேரம் என்றும் அவர் The Independent பத்திரிகையில் 'The world community often fails to act together, but it can and it should ' என்ற தலைப்பின் கீழ் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டு உள்ளார். அதே கட்டுரையில் விருப்புக்களும் கருத்துக்களும் முரண்பட்டு இருக்கலாம் ஆனால் எங்களால் கடந்த நூற்றாண்டின் துரதிஸ்டங்களை செப்பனிட முடியும் என்று எழுதி உள்ளார் ஹொவி அனன் அவர்கள்.

இலங்கை உள்நாட்டு யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் 'சர்வதேச சமூகம்', 'மனித உரிமைகள்' பற்றி குறைத்தே மதிப்பிடுகின்றனர். அவர்களுடைய பார்வையில் கடந்த 10 ஆண்டுகளில் சர்வதேச அரசியல், பொருளாதார, பாதுகாப்பு விடயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை ஏற்க மறுப்பதனால், சர்வதேச சமூகத்தின் முழுதான பயனை பெற தவறி உள்ளனர். கால் நூற்றாண்டிற்கு முன்னர் எப்படி இனப்பிரச்சனையை இரு சமூகமும் அணுகியதோ, அதே நிலையிலேயே இன்றும் அணுகப்படுகிறது. இலங்கை இன பிரச்சனை நடை பெற்று கொண்டிருக்கின்ற கால பகுதிக்குள்; தீர்வு காணப்பட்ட தென் ஆபிரிக்க பிரச்சனை, கிழக்கு தீமோர் பிரச்சனை இவற்றில் இருந்து எதனையும் இலங்கையில் உள்ளவர்கள் கற்று கொள்ளவில்லை. வியட்நாம் போரை எப்போதும் மேற்கோள் காட்டும் தமிழ் போராளிகள்; அன்று அமெரிக்கர்கள் வியட்நாமில் நடத்துவது நியாயமற்ற யுத்தம், என்பதை அமெரிக்க மக்களிற்கு புரிய வைக்கப்பட்டதை இன்றும் கற்கவில்லை. இவ் இனப்பிரச்சனை 60,000 உயிர்களை பலி எடுத்து விட்டது. போராளிகளும் தமிழ் மக்களும்; இராணுவமும் சிங்கள மக்களும் மனித உயிர்களே. மனிதர்கள் இறப்பதற்கல்ல வாழ பிறந்தவர்கள். அதற்கு தமிழ் இனமும் சிங்கள இனமும் விதிவிலக்கல்ல. சம்பந்தப்பட்ட அனைவரும் இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல், மத தலையீடுகள் இன்றி மக்கள் நலனின் அடிப்படையில் தீர்வு காண ஒத்துழைக்க வேண்டும். புரையோடிப் போயுள்ள இப்பிரச்சனைக்கு சர்வதேச சமூகம் உறுதி உடன் மத்தியஸ்தம் வகிப்பது இன்றியமையாதது.

கிழக்கு தீமோரில் காலதாமதமாக தன்னும் சென்ற ஐ.நா வின் சமாதான படைகள் போல் இலங்கையிலும் சர்வதேச சமாதான படை சமாதானத்தை கண்காணிக்க மட்டும் அனுப்பப்பட வேண்டும். அதற்கு இலங்கை அரசியல் நலன்களில் சம்பந்தப்படாத நாடே தலைமை ஏற்க வேண்டும். இப்படியான சர்வதேச மத்தியஸ்தம் மூலம் என்றென்றைக்கும் இப்பிரச்சனை தீர அனைவரும் குரல் கொடுப்பது; இலங்கை தீவில் வாழும் அனைத்து மக்களும் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழ வழிசமைத்து கொடுப்பதாக அமையும்.

## ஆசிரியர் குறிப்பு

பத்திரிகை தொடர்பாக பலர் தொலைபேசி மூலம் தம் கருத்துக்களை தெரிவிக்கின்றார்கள். இதனை தவிர்த்து உங்கள் கருத்துக்களை e-mail, Fax அல்லது தபால் மூலம் தெரிவிக்கவும்.மேலும் எமக்கு வாசகர்களிடமிருந்து சிறுகதைகள், கவிதைகள் வந்திருக்கின்றன. ஆனால் உதயன் பத்திரிகையில் தற்போது சிறுகதைகள், கவிதைகளை பிரசுரிக்க முடியாத நிலையில் உள்ளோம். எதிர்காலத்தில் அவை பிரசுரிக்கப்படலாம். நிகழ்கால சம்பவங்கள், செய்திகள் உங்களுக்கு அறிய வந்தால் உடனே உதயன் பத்திரிகைக்கு தெரியப்படுத்தலாம் அல்லது நீங்கள் அவற்றை எழுதி எமக்கு அனுப்பலாம். இது பத்திரிகை வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

## வாசகர் கடிதம்

**கல்வி, கலை ஆகியவற்றில் அக்கறை கொள்ளவும்**

எங்களுக்கு தற்போது கல்வி, கலை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொள்ளும் படி பல வேண்டுகோள்கள் வந்த வண்ணம் உள்ளன. நிச்சயமாக எமக்கும் அதில் மிகுந்த விருப்பம் உண்டு. இதனை நிவர்த்தி செய்ய நாம் உங்களையே நாடுகின்றோம். மேற்படி இரு துறைகளிலும் புலமையும் ஆர்வமும் உள்ளவர்கள் தங்கள் சேவையை வழங்க தயாரானால், நிச்சயம் நாம் மேற்படி துறைகளில் கூடிய கவனம் எடுக்க முடியும். இவற்றில் ஆர்வம் உள்ளவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

---

அன்புடன் ஆசிரியரிற்கு,

ஈலிங் றோட் சிவன் கோவிலிலி வைக்கப்பட்ட உதயன் பத்திரிகை மக்களிற்கு கொடுக்கப்படாமல் உள்ளே எடுத்து வைக்கப்படுகிறது. ஆலயத்தில் தினமும் பணிபுரிபவர்களிற்கே, பத்திரிகை வைக்கப்பட்டது தெரியாது உள்ளது. ஒவ்வோர் தடவையும் 200 ற்கு குறையாமல் உதயன் பத்திரிகையை வைக்கிறார்கள். ஆனால் நிர்வாகத்தினர் எடுத்த உள்ளே வைத்து விட்டு எறிந்து விடுகிறார்கள். மேலும் அவ் ஆலயத்தில் இரு மாதங்கள் முன் வரை பணியாற்றிய தொண்டர் "உதயனை சிவன் கோயிலில் வைக்க மாட்டார்களே" என்று சந்தேகத்தை எழுப்பியதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. இதனை நிவிர்த்திக்க ஏதாவது ஏற்பாடு செய்யவும்.

இப்படிக்கு

திரு யோகசுந்தரம், வடக்கு வெம்லி

**உங்கள் எழுத்து வண்மையை பணமாக்கலாம்.**

உதயன் பத்திரிக்கைக்கு நீங்கள் எழுதி பிரசுரமாகும் எந்த ஒரு விஷயத்திற்கும் (செய்திகள்,கட்டுரை,etc.) தக்க பணம் அளிக்கப்படும்.

சமீபமாக இலண்டணில் நடந்த சம்பவங்களே அதிக வரவேற்பு இருக்கும்.

# FREE ADS இலவச விளம்பரம் உங்களுக்கு!

**உதயனில் சிறு விளம்பரங்கள்**

வாசகர்களின் நன்மை கருதி இலவச விளம்பரங்களை பிரசுரிக்க உள்ளோம். இதனை பயன்படுத்தி நீங்கள் மிகுந்த பயனை பெற்று கொள்ளலாம். விளம்பரங்கள் கீழ் உள்ளதன் பிரகாரம் பிரசுரிக்கப்படும்.

£100 உட்பட்ட சொந்த பொருள் விற்பனை - இலவசம்

£200 உட்பட்ட கார் விற்பனை - இலவசம்

5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பிறந்த நாள் வாழ்த்து - இலவசம்

காணாமல்போன உயிரினம் அல்லது நபர் பற்றிய விபரம் - இலவசம்

காணாமல் போன பொருட்கள் விபரம் - £5

மணமக்கள் விளம்பரம் (இரு இதழில்) - £5

வேலைவாய்ப்பு விளம்பரங்கள் - £5

வேலை தேடும் விளம்பரங்கள் - £5

அறிவித்தல்கள் (வாழ்த்துக்கள், திருமண ... மற்றும், மரண அறிவித்தல், அஞ்சலி, ஆண்டு நிறைவு, இதர ....... ) - £10

கார், வான் விற்பனை (இரு இதழில்) - £10

வியாபார நிலையங்கள் விற்பனை - £30, £50, £60

**இந்த அறிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள்**

**சிறு விளம்பரங்கள் - படிவம்**

உங்கள் விளம்பரங்களையும் பிரசுரிக்கப்பட வேண்டிய விடயங்களையும் இப்படிவத்தில் எழுதி எமக்கு அனுப்பவும். 20 சொற்கள் வரை அருகில் கூறப்பட்ட கட்டணங்களும் அதற்கு மேற்படும் ஒவ்வோர் சொல்லிற்கும் 35p ம் அறவிடப்படும். இது இலவச விளம்பரங்களிற்கும் பொருந்தும். இப்படிவத்தை அனுப்பும் போது கட்டணம் அறவிடப்படும் விளம்பரங்களிற்கு அதற்கான காசோலையை வைத்து அனுப்பவும். கட்டண விளம்பரங்களிற்கு பணம் அல்லது காசோலையை GNM(PVT) LTD என்ற பெயரிற்கு எழுதி கீழ்காணும் முகவரிக்கு 29-05-00 முன் கிடைக்க கூடியதாக அனுப்பவும். 'உதயன்" "GEMINI HOUSE" 25/27 High Street Edgware, Middlesex HA8 7EE

**விளம்பர உள்ளடக்கம்:** **பிரிவு:**

விளம்பரதாரர் பெயர் ........................................

முகவரி ........................................

தொலைபேசி இலக்கம் ........................................

MILLENIUM STORES

364/366 Bath Road
Hounslow TW4 7HT

Phone: 020 8572 2323

ALL SRILANKAN & SOUTH INDIAN
Groceries, Fresh Fish, Fresh Meat,
Video/Audio CD DVD
SOLD HERE

உங்களுக்குத் தேவையான அனைத்து
பொருட்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

MILLENIUM STORES

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள்
சஞ்திகைகள் வார-மாதப் புத்தகங்கள் மேலும்
உடனுக்குடன் இறைச்சி பங்குபோட்டு கொடுக்கப்படும்.

BODY WARMERS • HIKING BOOTS

HARTEX

Established 1969

THE GREAT OUTDOORS

PULLOVERS
COOKWARE
TENTS
RUCKSACKS
HAMMOCKS
HEADWEAR
MAPS
GAITERS
SHORTS
SOCKS
THERMAL
UNDERWEAR
GROUND
SHEETS




COMBAT
CLOTHING
RAINWEAR
BOOTS
GLOVES
BELTS
WATER
BOTTLES
BODY
WARMERS
WEBBING
HIKING
SOCKS
FOAM MATS
AIR BEDS

COMPRESSOR BAGS • MONEY BELTS

MAP CASES • AIR BEDS • SLEEPING BAGS • TENTS

RAINWEAR • CUTLERY SETS AND PLATES • WATER BOTTLES

55 Victoria Road
Ruislip Manor
Middlesex HA4 9BS
TEL: 01895 634244

321 Northolt Road
South Harrow
Middlesex HA2 8JA
TEL: 0181-864 3333

OPEN 7 DAYS




NOORI HALAL BUTCHERS
328 High Street North,
Manor Park,
London E12 6PH
Tel:
020 8472 1655
020 8472 1667
020 8472 1677

NOORI Foods
793 Romford Road, Manor Park,
London E12 5AN
Tel: 020 8514 8999 Fax: 020 8478 1441